இலவச பிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12760)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-06 | 22-09-2005 | வியாழக்கிழமை | ஓசை-217

# இராணுவ ஆக்கிரமிப்பைக் கண்டித்து

# திருமலையில் நேற்று பூரண கதவடைப்பு

## இயல்பு வாழ்க்கை முற்றாக முடக்கம்

(திருமலை)

*திருகோணமலையில் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பைக் கண்டித்து நேற்று புதன்கிழமை முழு அளவிலான கதவடைப்புப் போராட்டம் நடைபெற்றது. இதனால் இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிப்படைந்தது.*

சட்டவிரோதமாக திருமலையில் திணிக்கப்பட்ட திடீர் புத்தர் சிலையை உடனே அகற்றவேண்டும் என்பது உள்ளிட்ட எட்டுக் கோரிக்கைகளை முன்வைத்து பொங்கு தமிழ்ச் சமூகம என்ற அமைப்பின் அழைப்பின்பேரில் திருகோணமலை தமிழ் மக்கள் இந்தப்போராட்டத்தை நடத்தினர்.

அனைத்து அரச அலுவலகங்கள், மாகாண சபை அலுவலகங்கள்,அரச மற்றும் தனியார் வங்கிகள், தமிழ் மற்றும் முஸ்லிம் வர்த்தக நிறுவனங்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் அலுவலகங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

அனைத்துப் பாடசாலைகளும்

(12ஆம் பக்கம் பார்க்க)



## அனைத்துலக சமூகம் விடுதலைப் புலிகள் மீது கொண்டிருந்த சந்தேகங்கள் நீங்கியுள்ளன

### - பிரான்ஸ் தொலைக்காட்சிசேவையில் ஜோசப் பரராஜசிங்கம்

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அனைத்துலக சமூகம் கொண்டிருந்த சந்தேகங்கள்தற்போது நீங்கியுள்ளன.

இது தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த வெற்றி என்று தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

பிரான்சில் இருந்து ஒளிபரப்பாகும் ரீ.ரீ.என் தொலைக்காட்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நேரடித் தொலைபேசி நிகழ்ச்சியில் பரராஜசிங்கம் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் அதி உயர் அரசியல் ஞானத்துடன் திகழ்கிறார்.

விடுதலைப்புலிகள் போரை வலிந்து ஆரம்பிக்கமாட்டார்கள். ஈழத்தமிழ் மக்கள் மீது போர் திணிக்கப்பட்டால் விடுதலைப்புலிகள் பலம் மிக்க அரணாக இருந்து அவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குவார்கள்.

விடுதலைப்புலிகளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் வேறு

(12ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் தேடுதல்!

(மட்டக்களப்பு)

வாழைச்சேனைப் பிரதேசத்தின் கறுவாக்கேணி, கொண்டயங்கேணி, சுங்காங்கேணி ஆகிய பகுதிகளில் படையினரும், பொலிசாரும் இணைந்து நேற்று தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதில் எவரும் கைது செய்யப்படவில்லை.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோர் தாக்குதல்; கிராம சேவையாளர் பலி!

### - மேலும் இருவர் படுகாயம்

மட்டக்களப்பு வாழைச்சேனை விநாயகபுரத்தில் நேற்றிரவு 8.30 மணியளவில் கிராம சேவை அலுவலர் ஒருவர் இனந்தெரியாதோரின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார். மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

கிண்ணையடி கிராம அலுவலரான அழகரத்தினம் சீவரத்தினம் (51) என்பவருடைய வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் குறித்த கிராம அலுவலர் கொல்லப்பட்டார். பாலசுந்தரம் ஈஸ்வரலிங்கம் (41), இராசநாயகம் விஜயகுமார் (18) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

உந்துருளியில் வந்தவர்களே

(12ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு பாராளுமன்றில் அங்கீகாரம்

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிக்க பாராளுமன்றத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட இதற்கான பிரேரணைக்கு ஆளுங்கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவாக வாக்களித்தன. ஐக்கிய தேசியக் கட்சியின் தி.மகேஸ்வரன், மேல் மாகாண மக்கள் முன்ன

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பொலிஸ் பதிவால் தமிழர்கள் வெளியேறும் அவலம்!

(கொழும்பு)

கொழும்பில் தமிழர்களைப் பதிவு செய்யும் முறையை மீண்டும் பொலிசார் ஆரம்பித்திருப்பதன் காரணமாக, பல தமிழர்கள், தங்கியிருக்கும் வீடுகளில் இருந்து வெளியேற வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

பொலிசார் வழங்கிவரும் படிவங்களில் பிரதான குடியிருப்பாளர் கையொப்பமிட வேண்டிய நிலையில் பிரதான குடியிருப்பாளர்கள் சிங்களவர்களாக இருக்கும்வேளை அவர்கள் கையொப்பமிட மறுத்து வருகின்றனர்.

இதனால் பல தமிழர்கள் தாம் தங்கியிருக்கும் வீடுகளிலிருந்து வெளியேற வேண்டியநிலை ஏற்பட்டு வருவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

## பாராளுமன்றில் அவசரகாலச்சட்டப் பிரேரணையை கிழித்தெறிந்துவிட்டு மகேஸ்வரன் வெளியேற்றம்!

### பாராளுமன்றில் பேச நேரம் ஒதுக்காமைக்கு ஆட்சேபம்

(கொழும்பு)

சிறிலங்கா பராளுமன்றத்தில் நேற்று அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனால் கிழித்தெறியப்பட்டது. பிரேரணை மீதான விவாதத்தில் தமக்கு நேரம் ஒதுக்கப்படாமையை ஆட்சேபித்த நிலையில் அவர் பிரேரணையைக் கிழித்தெறிந்து விட்டு பாராளுமன்றத்திலிருந்து வெளியேறினார்.இதன்போது அவர் அவசரகாலச் சட்டம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல், 1978 ஆம் ஆண்டு மேற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையிலேயே பாதுகாப்பான வங்கியாக தமிழீழ வைப்பகம் திகழ்கின்றது!

### ஏ.எப்.பி. செய்திஸ்தாபனம் புகழாரம்

இலங்கைத்தீவிலேயே மிக பாதுகாப்பான வங்கியாக தமிழீழ விடுதலைப்புலிகளின் வங்கியான 'தமிழீழ வைப்பகம்'திகழ்கிறது என்று சர்வதேச செய்திஸ்தாபனமான ஏ.எப்.பி. புகழாரம் சூட்டியுள்ளது.

இது தொடர்பாக ஏ.எப்.பி. ஸ்தாபனம் வெளியிட்டுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகள் தங்களுடைய வங்கியின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு உத்தியோகத்தரையோ கண்காணிப்பு கமெராவையோ வைத்திருக்கவில்லை.

இருந்தபோதும் யுத்தத்தின் போதும் அமைதிக்காலத்தின் போதும் தமிழர்களுக்கான பாதுகாப்பு வைப்பகமாக அந்த வங்கிதிகழ்கிறது.

இந்த வங்கியானது தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியில் முழுமையான நிதிக் கொள்கை நிர்வாகத்தோடு இயங்கி வருகிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டு வீச்சு; 4 படையினர் படுகாயம்!

மட்டக்களப்பு இருதயபுரம் மேற்குப் பகுதியில் நேற்று வீதிக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறிலங்காப்படையினர் மீது இனந்தெரியாதோர் நடத்திய கைக்குண்டுத் தாக்குதலில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் ஒருவர் சிறிலங்காப் பொலிசார். ஏனையவர்கள் படையினராவர்.

நேற்று நண்பகல் 12.30 மணி

(12ஆம் பக்கம் பார்க்க)

**என் போராட்ட வரலாற்றுச் சாதனைகளையிட்டு நான் மாபெரும் மகிழ்ச்சியும், பூரண திருப்தியும் அடைகின்றேன்.**

**தியாகி லெப்.கேணல் திலீபன்**



## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி 156 ஆம் கட்டை வைரவர் கோவில் முன்பாக (A-9 அருகாமை) 1/2 ஏக்கர் உறுதிக் காணி விற்பனைக்குண்டு தொடர்புக்கு சீலன் இல:-12 ஆனந்தநகர், சேவியர் கடைச்சந்தி, கிளிநொச்சி (சி.12650)

### திறப்பு விழா

கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலய புதிய கட்டடத் திறப்பு விழா இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் முதன்மை விருந்தினராக கிளி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் கலந்து கொள்கிறார்.

### சிறுகதைத்தொகுதி அறிமுகவிழா

பிரபல எழுத்தாளர் கனகசபை தேவகடாட்சத்தின் "ஒரு பிடிமண்' சிறுகதைத்தொகுதியின்அறிமுகவிழா எதிர்வரும் செப்ரெம்பர் 25 மாலை திருகோணமலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது. இந்நூலின் விற்பனை, நன்கொடைகள் மூலம் கிடைக்கும் பணம் முழுவதும் விக்னேஸ்வரா மகாவித்தியால கல்வி அபிவிருத்திக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

### கௌரவிப்பு நிகழ்வு

எடின்பறோ பிரெஞ்சு கலை விழாவில் 'கடலின் குழந்தைகள்' நிகழவில் பங்கு பற்றிய திருகோணமலைக் கலைஞர்கள் சுமாலி ரங்கே, பிரதீபன் பூபால சிங்கம், கெங்கேஸ்வரன் வேல் முருகன் ஆகியோ ரைப்பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு செப்ரெம்பர் 25 ஆம்திகதி மாலை திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற வுள்ளது. (25)

# கிணற்றில் வீழ்ந்து மாணவன் மரணம்

(கரவெட்டி)

பாடசாலை பகுதி நேர வகுப்புக்கு சென்ற பன்னிரெண்டு வயது மாணவன் பாவனையற்ற கிணற்றுள் வீழ்ந்து பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளார்.

கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரி ஏழாம் தரம் கல்வி பயிலும் கரவெட்டி தெற்கைச்சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை பரமநாதன் (வயது-12) எனும் மாணவனே கிணற்றுள் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

மேற்படி சம்பவமானது நேற்று நண்பகல் நடந்துள்ளது. பகுதி நேர வகுப்புக்குச்சென்றிருந்த மாணவன் சக மாணவர்களுடன் கல்லூரி முன்புறமுள்ள வயல் பகுதியில் விளையாடிகொண்டிருந்த சமயம் பாவனையற்ற கிணற்றுள் தவறி வீழ்ந்து மரணமடைந்துள்ளார்.

மாணவரின் சடலம் பருத்தித் துறை ஆதாரவைத்திய சாலையில் பிரேத பரிசோதனையின் பின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை மரண விசாரணை அதிகாரி ந.தங்கராஜா நடத்தினார். மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

(கா)

# முல்லை வேலையற்ற பட்டதாரிகள் நேற்று கலந்துரையாடல்

முல்லை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான சிறப்புக்கலந்துரையாடல் நேற்றுக்காலை 10.00 மணிக்கு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் க.கனேந்திரன் தலைமையில் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் ஆரம்பமானது. கலந்துரையாடலில் கனேந்திரன் கருத்துத்தெரிவிக்கையில; முல்லை மாவட்டத்தில் ஆசிரிய பயிலுநர்களாக கடமைபுரியும் அனைத்து ஆசியர்களின் விபரமும் முல்லை மாவட்டத்தில் வேலையற்ற அனைத்துப்படடதாரிகள் விபரமும் தனித்தனியாக எடுக்கப்படும் எனவும், இந்த விபரங்கள் அனைத்தும் திருகோணமலையிலுள்ள மாகாணக் கல்வி அமைச்சுக்கு வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார். இக்கலந்துரையாடலில் முல்லை மாவட்டத்திலுள்ள அனைத்து ஆசிரிய பயிலுநர் பட்டதாரிகளும் ஏனைய வேலையற்ற பட்டதாரிகளும் கலந்த கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# கிளி. இரணைமடு கிராமத்தில் போருக்கான இறுதி அழைப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்த சாந்தபுரம் கிராமத்தில் போருக்கான இறுதி அழைப்பும் வீட்டுத்தரிசிப்பு நிகழ்வும் கடந்த 19ஆம் திகதி மாலை ஆறு மணிக்கு பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அ.போர்ப்பிரியன் தலைமையில் இடம் பெற்றன. இந்நிகழ்வுகளில் மேற்படி கிராமங்கள் போர் முரசு முழக்க போராளிகள் வீடு வீடாக சென்று போருக்கான இறுதி அழைப்புக்களை மக்களுக்கு விளக்கி வருகின்றனர். இதனால் மக்கள் விழிப்படைந்து வருகின்றனர். இந்நிகழ்வில் துறைசார்ந்த பொறுப்பாளர்கள் மகளிர் பொறுப்பாளர்கள், போராளிகள், தமிழீழ நிர்வாக சேவையினரின் பொறுப்பாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டு சிறிலங்கா அரசியல் மாற்றங்கள் இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீது பாரிய யுத்தத்தை நடாத்துவதற்குதயாராகி வரும் நேரத்தில் தமிழர்கள் இப் போருக்கு தயாராக வேண்டும் எனப்பல கருத்துரைகளையும் மக்களுக்கு வழங்கி வருகின்றனர். இந்நிகழ்வுகள் பல கிராமங்களில் இடம் பெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (24)

# அறிவித்தல்

அனைத்து டிப்ளோமா (இசை/நடன) பட்டதாரிகளையும் சகல ஆவணங்களுடன் இன்று (22.09.2005) யாழ். கல்வி வலயம் முன்பாக காலை 9 மணி-12 மணிக்குள் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறீர்கள்

இப்படிக்கு
தலைவர்,
செயலாளர்

(5391)

# விற்பனை பிரதிநிதி (Sales Rep)

வன்னி மாவட்டத்திற்கான கிலினொல் பொருட்கள் விற்பனை செய்வதற்கு அனுபவம் உள்ள விற்பனை பிரதிநிதி தேவை

தகைமை:- (A/L)

அனுபவம்:- வன்னியில் வசிப்பவர் விரும்பத்தக்கது. (F.M.C.G) (அதிக விற்பனையிலுள்ள பொருட்கள்) 01.10.2005 இற்குமுன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் யாழ்ப்பாணம். 111 கண்டி வீதி யாழ்ப்பாணம் (5393)

# கேள்வி அறிவித்தல்

## கிளிநொச்சியில் அரச அதிபருக்கான சுற்றுலா விடுதி அமைப்பதற்கான கேள்வி கோரல்

மேற்குறித்த வேலைக்கான கேள்வி விண்ணப்பங்கள் 05.09.2005 ஆம் நாளிதழில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளவாறு அதில் குறித்த நிபந்தனைகளுடன் கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும். முடிவு நாள் 30.09.2005 காலை 10.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபரும்,
கிளி/ மாவட்ட கேள்விச் சபைத்தலைவரும்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.12845)




# அமெ. "றீற்றா" சூறாவளி எச்சரிக்கை
# நியூ ஓர்லியன்ஸ் மக்கள் வெளியேற்றம்

**அமெரிக்காவின் நியூ ஒர்லியன்ஸ் உட்பட கரையோரப் பகுதிகளிலிருந்து மக்கள் அவசர அவசரமாக இடம் பெயர்க்கப்பட்டு வருகின்றனர்.**

கற்றினா சூறாவளியினால் பாதிக்கப்பட்டு மூன்று வாரங்கள் கடந்த நிலையில் மீண்டுமொரு சூறாவளி அப்பகுதியைத் தாக்கக் கூடுமென அந்நாட்டு வானிலை ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர். இதனையடுத்து நூற்றுக் கணக்கான பேருந்துகள் மூலம் டெக்சாஸ்-லூசியானா ஆகிய பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்க்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

மெக்சிக்கோ வளைகுடாவில் நிலைகொண்டுள்ள தாழமுக்கம் இரண்டு வகையான சூறாவளிகளை ஏற்படுத்தக் கூடும் என அஞ்சப்படுகிறது. றீற்றா எனக் கூறப்படும் இச்சூறாவளிக்காற்று புளோரிடா, கியூபா, டெக்சாஸ், லூசியானா ஆகிய பகுதிகளை இவ்வார இறுதி வரை தாக்கக் கூடும் என அமெரிக்க தேசிய சூறாவளி ஆய்வு அமையம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக மணிக்கு 160 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக் கூடிய றீற்றா சூறாவளி கியூபாவின் வட பகுதிகளையும் அமெரிக்காவின் தொடர் தீவுப் பகுதிகளையும் தாக்கக் கூடும் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.



தேசிய ஓசோன் காலநிலை ஆராய்ச்சி மையத்தினால் வெளியிடப்பட்ட கரிக்கேன் சூறாவளியின் செய்மதிப் படம்



புளோரிடா மேற்கில் வானிலை ஆராய்ச்சி உபகரணங்களுடன் ஒரு கார் செல்வதைக் காணலாம்.

# வங்காள விரிகுடாவில் மீன் பிடிக்கச் சென்ற 3500 பங்களாதேஷ் மீனவரைக் காணவில்லை

பங்களாதேஷில் வங்காள விரிகுடாவில் 200 மீன்பிடி இழுவைப் படகுகளுடன் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்ற சுமார் 3500மீனவர்களைக் காணவில்லையென்று தெரிவிக்கப்படுகின்றது.

கடலில் காற்றமுத்தத்தாழ்வு மண்டலம் உருவாவதற்கு முன்னர் கடந்த வெள்ளி, சனிக்கிழமைகளில் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களையே காணவில்லையெனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் காணாமல்போன சில மீனவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். கடலில் இருந்து திரும்பிய சில மீனவர்கள் சில படகுகள் நீரில் மூழ்கி விட்டதாக தெரிவித்துள்ளனர்.

# அதிக எண்ணெயைச் சந்தைப்படுத்தல் ஒபெக் நாடுகள் முடிவு

உலகளவில் எண்ணெயின் விலையேற்றத்தை தடுக்கவும் எண்ணெய்ச் சந்தையைச் சீராக்கவும் உலக சந்தையில் மேலும் அதிக எண்ணெயினை சந்தைப்படுத்த ஒபெக் நாடுகளின் எண்ணெய்த் துறை அமைச்சர்கள் முடிவுசெய்துள்ளனர். தங்களுடைய கையிருப்பிலுள்ள எண்ணெயில் மிகவும், கூடுதலாக 20 இலட்சம் பரல்கள் வழங்கப்போவதாக ஒபெக் நாடுகள் கூறியுள்ளது.

ஆனால் ஒபெக் நாடுகள் தங்களது உற்பத்தியை அதிகப்படுத்தப்போவதில்லை. சுத்திகரிப்பு நிலையங்களுக்கு கூடுதல் கச்சாய் எண்ணெய் தேவையில்லாததனால் நிலத்தில் இருந்து மேலும் எண்ணெய் எடுப்பது தேவையில்லையென்று கூறியுள்ளது.


# ஈராக் கர்பாலாவில் கூடியுள்ள சியா முஸ்லிம்களுக்கு விசேட பாதுகாப்பு

ஈராக்கிய நகர் கர்பாலாவில் கூடியுள்ள ஆயிரக் கணக்கான சியா முஸ்லிம் மக்களுக்கான விசேட பாதுகாப்பு ஒழுங்கை ஈராக்கிய பாதுகாப்பு படையினர் வழங்கி வருகின்றனர்.

மதம் தொடர்பான நிகழ்வில் கலந்து கொள்வதற்காக கர்பாலா நகரில் உள்ள புனித ஸ்தலத்திற்கு ஈராக்கின் பல பாகங்களிலும் இருந்து வந்த மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காகவே இந்த விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆயிரத்திற்கும் அதிகமான ஈராக்கிய பொலிசார் இந்தப் புனித ஸ்தலத்திற்கு பாதுகாப்பு வழங்கி வரும் அதேவேளை, அமெரிக்கா தலைமையிலான சர்வதேசப் படைகளின் படைப்பிரிவு ஒன்று வெளியே காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வார காலப் பகுதியில் மட்டும் சுனி முஸ்லிம்களின் தாக்குதல் காரணமாக 200 இற்கும் மேற்பட்ட சியா முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டதை அடுத்தே இந்த விசேட பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



**அமெரிக்காவின் நாசா விண்வெளி நிறுவனம் 2018 ஆம் ஆண்டில் சந்திரனுக்கு மீண்டும் மனிதனை அனுப்புகிறது. ரூபா.ஐந்து இலட்சத்து 70 ஆயிரம் கோடி செலவில் உருவாகும் இந்த திட்டத்திற்காக புதிய விண்கலத்திற்கு 125 தொன் எடையுள்ள தளபாடங்கள் தயாராகி வருகின்றன. ஆறு பேர் சந்திரனுக்கு செல்லும் வகையில் விண்கலம் உருவாக்கப்படும். இதன் மாதிரித் தோற்றத்தைப் படத்தில் காணலாம்.**

# 2ஆம் உலகப் போரின் போது புதைக்கப்பட்ட 1000 குண்டுகள் சீனாவில் கண்டு பிடிப்பு

(டோக்கியோ)

சீனாவில் இரண்டாம் உலகப் போரின் போது பயன்படுத்தப்பட்ட 1000 வெடிக்காத குண்டுகள் மண்ணில் புதைந்து கிடந்தது கண்டு பிடிக்கப்பட்டன.

இரண்டாவது உலகப் போரின் போது சீனாவின், பல்வேறு பகுதிகளில் ஜப்பான் குண்டு வீசியது.

சீனாவில் ஜப்பான் வீசிய ஆயிரக்கணக்கான குண்டுகள் வெடிக்காமல் இன்னும் மண்ணில் புதைந்து கிடக்கின்றன.

அந்தக் குண்டுகளை ஜப்பான் இப்போது அகற்றி வருகிறது. சீனாவின் கிழக்குப் பகுதியில் ஜப்பானிய குழுவினர் ஈச்சம் என்ற இடத்தில் தோண்டிப் பார்த்த போது அங்கு 1000இற்கு மேற்பட்ட வெடிகுண்டுகள் மண்ணில் புதைந்து கிடந்தது கண்டு பிடிக்கப்பட்டன.

அவற்றை அந்தக் குழுவினர் மீட்டனர். இவற்றில் 281 வெடிகுண்டுகள் மிகவும் ஆபத்தான இரசாயனக் குண்டுகள். இந்தப் பகுதியை முன்பு ஜப்பான் கைப்பற்றி தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. போர் முடிந்து திரும்பிச் செல்லும் போது அந்த வெடிகுண்டுகளை ஜப்பானிய படையினர் விட்டுச் சென்றிருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

# ஈரானின் அணுசக்தி திட்டத்தை ஐ.நாவுக்கு கொண்டு செல்வதற்கு எதிர்ப்பு

தமது நாட்டின் அணுத் திட்ட விடயம் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவைக்கு கொண்டு செல்லப்பட்டால் அத் திட்டங்களை சோதனையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரானின் அணுத் திட்ட நடவடிக்கைகளை உடனடியாக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டுமென சர்வதேச அணுசக்தி நிறுவனத்திடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஈரானின் அணுத் திட்டம் தொடர்பான பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளும் அந் நாட்டின் பிரதிநிதி ஒருவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

ஈரானின் அணுத்திட்ட விடயம் தொடர்பாக சர்வதேச அணுசக்தி நிறுவனம் ஆராய்ந்து வருகின்ற நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி ஆகிய மூன்று நாடுகளும் தமது உத்தேச தீர்மானம் ஒன்றை அந்த நிறுவனத்திடம் சமர்ப்பித்துள்ளனர். எவ்வாறாயினும் அணுசக்தி விடயத்தில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவை தலையிடுவதை சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் ஆளுநர் சபை எதிர்த்துள்ளது.

# ஈராக்கில் தொடர் வன்முறைகளில் ஒன்பது அமெரிக்கர்கள் பலி

ஈராக்கில் மூண்டெழுந்துள்ள வன்முறையால் கடந்த திங்கட் கிழமையிலிருந்து அமெரிக்க வெளியுறவு அமைச்சக பாதுகாப்பு அதிகாரி உட்பட குறைந்தது ஒன்பது அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர்.

வெளியுறவு அமைச்சகபிராந்திய துறைப் பாதுகாப்பு அதிகாரி மற்றும் மூன்று தனியார் பாதுகாவலர்கள் ஈராக்கின் மொசூல் நகரில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்தனர் என்று அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நமாடியில் நிகழ்ந்த இரு தனித் தனித் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் நான்கு அமெரிக்கப் படை அதிகாரிகளும், தலைநகர் பாக்தாத் அருகே நேற்று முன்தினம் இடம் பெற்ற குண்டுத் தாக்குதலில் படை வீரர் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

# ஆந்திராவில் கடும் மழையால் வெள்ளப்பெருக்கு; பலர் பலி

ஆந்திராவில் கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. ரயில் போக்குவரத்து, விமானப் போக்குவரத்துக்கள், தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

புயலுடன் கூடிய மழை பெய்ததினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 73 ஆக உயர்ந்துள்ளது.

வங்கக் கடலில் உருவான புயல் கடந்த திங்கட்கிழமை கலிங்கப் பட்டினம் அருகே கரையைக் கடந்த போது பெய்த மழையினாலே இப் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

ஆந்திராவில் கடலோர மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்கின்றது. இதனால் அங்கு நிலைமை மேலும் மோசமடையும் வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தியாகதீபம் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி திலீபன் மருத்துவ சேவையினரின் சிறப்பு மருத்துவ முகாம்

(அளம்பில்)

**தியாகதீபம் திலீபனின்18 ஆம் ஆண்டு நினைவையொட்டி அளம்பில் திலீபன் மருத்துவ சேவையினரின் ஒழுங்குபடுத்தலில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால்சிறப்பு மருத்துவ முகாம் ஆறுமுகத்தான் குளத்தில் நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு ஆரம்பமானது.**

அளம்பில் திலீபன் மருத்துவமனையின் அபிவிருத்திக் குழுத்தலைவர் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச்சுடரினை வைத்திய கலாநிதி சிவபாலன் ஏற்றினார். தமிழீழத்தேசியக் கொடியினை சிறப்பு மருத்துவப் போராளியும் திலீபன் மருத்துவ சேவையின் நிர்வாகப் பொறுப்பாளருமான புலிமறவன் ஏற்றினார். திலீபனின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலன் ஏற்றினார். மலர்மாலையினை வைத்திய கலாநிதி வவுசர் அணிவித்தார்.மலர் வணக்கத்தினை சிறப்பு மருத்துவப்போராளி சுதர்சன் ஆரம்பித்துவைத்தார்.தொடர்ந்து நோய்கள் எவ்வாறு ஏற்படுகின்றன.அவற்றை எவ்வாறு கட்டுப் படுத்துவது போன்றவிடயங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்ட மண்டபத்தினை வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலன் நாடாவை வெட்டி திரை நீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து மருத்துவ சேவைகள் நடைபெற்றன.இதில் சகல நோய்களுக்கான மருத்துவ ஆலோசனைகளும் மருத்துவ சிகிச்சையும் இடம்பெற்றன. இம் மருத்துவ சேவையில் பெருமளவான மக்கள் பயன்பெற்றனர். (20)

# தியாக தீபம் திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு பொதுஇடங்களில் சிரமதானப்பணி

(அலுவலக செய்தியாளர்)

தியாகதீபம் திலீபனின் 18ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு கிளிநொச்சி நகரிலுள்ள பொது இடங்களில் சிரம தானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த திங்களன்று கரைச்சிப் பிரதேச சபையின்அனுசரணையுடன் திருநகர் மக்களினால் திருநகர் பொது மயானத்தில் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பற்றைகள் அழிக்கப்பட்டு துப்புரவு வேலைகள் இடம்பெற்றன.

திருநகர் கிராமஅபிவிருத்திச் சங்கத்தலைவர் நா. வேலாயுதம் தலைமையில் நடைபெற்ற மேற்படி சிரமதான நிகழ்வில் கரைச்சிபிரதேச சபை விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தன், கரைச்சி பிரதேச செயலர் செல்வி சுலோஜினி, கரைச்சி பிரதேச புனரமைப்பிற்கான நிறுவன அதிகாரி தருமரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டதுடன் சிரமதான நிகழ்வு நிறைவுற்ற வேளையில் கரைச்சி பிரதேசசெயலரினால் சிரமதானத்தில் பங்கு பற்றிய மக்களுக்குசிற்றுண்டிப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டதுடன் தனது நன்றியினையும் பாராட்டினையும் தெரிவித்துக்கொண்டார்.

(சோ)

# அறிவுத்திறன் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு யுனிசெப் பரிசில்கள் வழங்கி கௌரவிப்பு

துணுக்காய்வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நடத்தப்பட்ட அறிவுத்திறன் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு யுனிசெப்நிறுவனம் பரிசில்களை வழங்கியது. இப்பாடசாலைகளில் சமூகக்கல்வி கண்காட்சி, சமூகக் கல்விஅறிவுத்திறன் போட்டிகள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப்பெற்ற 28 மாணவர்களுக்கு யுனிசெப் நிறுவனத்தினர் பரிசில்கள் வழங்கி கௌரவித்தனர்.யுனிசெப் நிறுவன நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் சி.கௌரிபாலன், வலயக் கல்வி பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் ஆகியோர் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கினர்.

துணுக்காய் கல்வி வலய சமூகக்கல்வி ஆசிரியஆலோசகர் பு.தயாநிதி தலைமையில் மாங்குளம் மகாவித்தியாலய பாடசாலை மண்டபத்தில் கடந்த 15ஆம் திகதி இப்பரிசளிப்புவைபவம் நடைபெற்றது.

# கரையோர சமுதாய அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் மக்கள் பங்களிப்புடன் தேவைப்பகுப்பாய்வு

(திருமலை)

வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தி திட்டத்தின் நிதியுதவியின்கீழ் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் அபிவிருத்தி செய்யப்படவுள்ள திருகோணமலை மாவட்டத்திலுள்ள நான்கு கிராமங்களில் ஒன்றான கல்லறாவ எனும் கிராமத்தில் மக்கள் பங்களிப்புடனான கிராமத் தேவைப்பகுப்பாய்வு ஆரம்பிக்கப்பட்டது. நேற்று முன்தினம் காலை 9.00 மணிக்கு இடம்பெற்ற இந்த தேவைப் பகுப்பாய்வு மாவட்ட திட்ட அலுவலர் வே.கலைவர்ணன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு விருந்தினராக வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்ட கண்காணிப்பு உத்தியோகத்தர் ச.தில்லைநாதன், கிராம உத்தியோகத்தர் பரஞ்சோதி, சமுர்த்தி உத்தியோகத்தர் ஏ.எல்.கலின் றகுமான் . ச.சதிஷன் கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழக பணியாளர்களும் கலந்துகொண்டனர்

# பூநகரியில் கிராம அபிவிருத்திக்கான செயற்திட்ட அறிமுக நிகழ்வு

(பூநகரி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் கிராம அபிவிருத்திக்கான செயற்திட்ட அறிமுக நிகழ்வு ஒன்று நேற்றுமுன்தினம் பூநகரிப்பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்புடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் போரினால் பாதிக்கப்பட்ட புனரமைப்புத் திட்டத்திற்கமைவாக பூந கரிப் பிரதேசத்திலுள்ள மட்டுவில் நாடு என்னும் இடத்தில் அதன் கிராம அலுவலகர் சீலமணி தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கேற்றப்பட்டதையடுத்து தேசியக்கொடியும் ஏற்றப்பட்டது. இதனையடுத்து செயற்திட்டத்தின் பெயர்பலகையினை கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் பூங்குன்றன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

பூநகரி மட்டுவில் நாடு மேற்குக் கிராமமானது போர்ச்சூழல்களினாலும் சமூகப் பொருளாதார ரீதியாகவும் மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்பட்டதன் காரணமாக இக்கிராம அபிவிருத்திக்கான இந்தச் செயற்திட்ட அறிமுக நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக வடக்கு, கிழக்கு சமுதாய மீள் கட்டமைப்புத் திட்ட இணைப்பாளர் சுடர். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளிநொச்சி மாவட்ட பணிப்பாளர் கெங்காதரன் மற்றும் சமூக ஆர்வலர்கள், பொது மக்களெனப் பலர் கலந்துகொண்டனர்.

# சமூகபொருளாதார அபிவிருத்தி நிறுவனம் 20 பயனாளிகளுக்கு கடன் வழங்கல்

தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனம் தமிழர் தாயகத்தில் அவசியமானதாக இனங்காணப்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வாக பல திட்டங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகின்றது. அந்தவகையில் குடும்பங்களின் சுயதொழில் முயற்சியை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கான உதவியை "செம்மை" எனப்படும் திட்டத்திற்கூடாக மேற்கொண்டு வருகின்றது.

இந்த வகையில் கிளிநொச்சி சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவன நடுவப்பணிமனையில் வைத்து கோழிவளர்ப்புக்கென 80,000.00 ரூபாவினை மீளளிப்புக்கடனாக கிளிநொச்சி ஆனந்த புரத்தில் அமைந்துள்ள உதயநிலா மகளிர் சங்கத்தில் உள்ள 20 பயனாளிகளுக்கு வழங்கியுள்ளனர். மேற்படி நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது.மேற்படி நிதியினை புலம் பெயர்ந்து கனடாவில் வதியும் சின்னத்துரை ஈசன் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# பேராதனை பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

(வவுனியா செய்தியாளர்)

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைப் பிரிவின் கலை முதற்தேர்வு பெறுபேறுகள்வெளியாகியுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவின் உதவிப் பதிவாளர்தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற இப் பரீட்சையின் பெறுபேறுகளே தற்போது வெளியிடப்படுவதாகவும், முதற்கட்டமாக பரீட்சையில் சித்தி அடையத் தவறியவர்களுக்கான பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்படுவதாகவும் அதனைத்தொடர்ந்து சித்தி அடைந்தவர்களுக்கான பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைப்பெறுபேறுகளை அறிய விரும்புபவர்கள் 0812-388057 என்றதொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பரீட்சை சுட்டெண்ணை தெரிவித்து பெறுபேறுகளைஅறிந்து கொள்ள முடியும். (10)




கிளிநொச்சி மாவட்ட திருநெறிக்கழகத்தினரால் மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட சைவ நெறி இடைக்காலப் பரீட்சையில் சித்திபெற்ற பூநகரி முட்கொம்பன் பாடசாலை மாணவர்களையும் திருநெறி கழகத்தினரையும் கிளி. வலய பிரதிக் கல்விப்பணிப்பாளரையும் படத்தில் காணலாம்.

(படம்-சோதி)

# ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு த.பு.கழகம் மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்

(திருமலை)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் ஒப்ரேஸன் யூ.எஸ்.ஏ நிதிப்பங்களிப்புடன் திருகோணமலை மாவட்ட கல்லடியில் ஆழிப்பேரலையால் கடற்றொழில் உபகரணங்களை இழந்தவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மூதூர் பிரதேச இணைப்பாளர் .இ.இரவிச்சந்திரன்' தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு திருகோணமலை மாவட்ட துணை அரசியல் துறைப்பொறுப்பாளர் .செம்மணன்', ஒப்ரேஸன் யூ.எஸ்.ஏ நிறுவன இணைப்பாளர். அர்ஜீன் எதிர்வீரசிங்கம் தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளர் .சு.விஜயகுமார் தமிழர்புனர் வாழ்வுக்கழக உதவிப் பணிப்பாளர் .சி.குமரகுருபரன், மீனவ சமாசத் தலைவர் ஜெயக்குமார் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் .தங்கராசா, வெருகல் ஈச்சிலம்பற்று சமாசத் தலைவர் .யோகராசா ஆகியோரும், பிரதம விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர் இந்நிகழ்வில் கல ந்துகொண்ட திருகோணமலை துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன் பேசுகையில், வேகமாக வேலைகளைச் செய்து வரும் நிறுவனமாக இன்று தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வளர்ந்து வருகின்றது. இன்றைய இந்த நிகழ்வில் 140 பேருக்கு 70 படகு இயந்திரங்களும் வலைகளும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது எனவும் தெரிவித்தார்.

# விசேட கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்ட வர்த்தக சங்கத்தினரிற்கான விசேட கலந்துரையாடல் நாளை காலை 10.00 மணிக்கு கிளி/ மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில்நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலிற்குவர்த்தக சங்கத் தலைவர்,செயலாளர் உட்பட அனைத்து கிளிநொச்சி நகர வர்த்தகர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

# இயற்கை மருத்துவத்தில் மருத்துவ பட்டம் பெற்றார்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிவைத்திய கலாநிதி காசிலிங்கம் சுஜந்தன் இயற்கை மருத்துவ கற்கையினை நிறைவுசெய்து இயற்கை மருத்துவத்தில் மருத்துவப்பட்டம் பெற்றுள்ளார்.

அத்துடன் இயற்கை மருத்துவத்துடன் யோக சிகிச்சை, தொழுகை மருத்துவ கற்கைகளையும் பூர்த்தி செய்துள்ளது டன். இவர் ஹோமி யோபதி, அக்குபங்சர் மருத்துவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சோ)

# பொங்கு தமிழில் கலந்து கொள்வது ஒவ்வொரு தமிழனதும் தேசிய கடமை

பா.உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

யாழ்ப்பாணம்)

**யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் இம் மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வில் அனைத்துத் தமிழ் மக்களும் கலந்து கொண்டு இறுதியான நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் காட்ட அலை அலையாக அணி திரளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறை கூவல் விடுத்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:-

தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அவர்களின் அடிப்படை உரிமைகளை ஏறி மிதித்து தாயகத்தை சிதைக்கவும், அவர்களுக்குரிய தன்னாட்சி உரிமையை நிராகரிக்கவும் சிங்கள பௌத்த பேரினவாதம் தனது பேய்க்கூச்சலை தென்னிலங்கையில் மீண்டும் உரக்க ஒலிப்பது எமக்கு நன்றாகவே கேட்கின்றது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலைக்கு தென்னிலங்கை அரசியல் சூழ்நிலை சென்றுள்ளது. இந்த சிங்களபௌத்த பேரினவாதம் அவ்வப்போது எழுப்பி ஆடிய ஆட்டங்களால் தமிழர் தாயகத்திலும், தமிழர் தம் நெஞ்சங்களில் பல மாறாத காயங்கள் ஏற்பட்டன. ஆனால் தற்போது எழுந்து ஆர்ப்பரிக்கும் சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழர் தாயகத்தை கூறு போட்டு தமிழர்களின் இதயத்தையே பிளந்து விடும் மூர்க்க நிலையை இறுதி வடிவமாக எடுத்துள்ளது.

இதன் மூலம் ஜனநாயக பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்ட வழிமுறைகளினூடாக தீர்வு ஒன்றை எட்டுவதற்கிருந்த சந்து பொந்துகளைக் கூட அடைத்து விட்டு பேரின வாதம் எக்காளமிடுவதை தமிழ் மக்களாகிய நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். தோன்றியுள்ள பயங்கரவாத நிலையால் எழும் எமது உணர்வலைகளை தமிழ் பேசும் மக்களாகிய நாம் சர்வதேச சமூகத்தின் முன் கொட்டி நியாயத்தைக் கேட்க வேண்டும்.சிங்களப் பேரின வாதத்தின் மூர்க்கத்தினால் இறுதி முடிவு எடுக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை சர்வதேச சமூகத்தின் முன் எடுத்தியம்ப வேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனினதும் கட்டாயக் கடமையாகும்.

எமது தாயகத்தில் எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக் கொள்வதற்கு எமக்கு இயற்கையாகவே இருக்கும் உரிமையை உலகம் அங்கீகரிக்க வேண்டும். எமது தாயகப் பகுதியில் ஆக்கிரமித்து நிற்கும் சிங்களப் படைகள் வெளியேற வேண்டும். வரலாற்றுரீதியாக எமது தாயகம் கொண்டிருந்த இறையாண்மையை மீண்டும் பெறுவதற்கும் எமது சுதந்திர வாழ்வை உறுதிப்படுத்தவும், உலகத்தைக் கோருவதற்கான எழுச்சி எமது தாயகப் பிரதேசமெங்கும் பொங்கி எழுந்ததை மனதில் கொண்டு யாழ். மாவட்டத்தில் இம் மாத இறுதியில் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வில் எல்லாத் தமிழ் மக்களும் கலந்து கொள்ள வேண்டுமென கூவி அழைக்கின்றோம்.

தீர்க்கமான இறுதிக் கட்ட நிலையொன்றை எடுப்பதற்கு சிங்களப்பேரினவாதம் எம்மை நிர்பந்தித்துள்ளது. அவர்களுடன் நாங்கள் செய்த ஒப்பந்தங்களோ பல. அவை கிழிந்த கடதாசித் துண்டுகளாகி விட்டன. இறுதியாக இயற்கைப் பேரவலத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான பணிகளுக்கான பொதுக் கட்டமைப்புக் கூட செல்லாக்காசாகி விட்டது. இந்த அவலத்தையும், பேரினவாதம் செய்த அநியாயங்களையும் கவனத்தில் கொண்டு இறுதியான நிலையொன்றுக்குத் நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை எடுத்துக் காட்டி எழுச்சிப் பிரகடனம் செய்ய அலை அலையாக திரண்டு வாருங்கள் எனப் பணிவன்போடு அழைக்கின்றேன். இது எமது தேசியக் கடமை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு குறித்து முகமாலை படையினர் தகவல் சேகரிப்பு

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டில் இந்த மாதம் இடம் பெறவுள்ள பொங்கு தமிழ் எழுச்சி மாநாட்டின் நிகழ்வுகள் குறித்து விபரம் சேகரிக்கும் நடவடிக்கைகளில் சிறிலங்கா படை புலனாய்வாளர்கள் தீவிரம் காட்டி வருவதாகத் தெரிய வருகிறது.

தற்பொழுது முகமாலைச் சோதனைச் சாவடியூடாக வரும் பொது மக்களிடம் படையினர் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு குறித்தும் அதில் கலந்து கொள்ளவுள்ளோர் விபரம், அதன் நோக்கம் குறித்தும் பொது மக்களிடம் துருவித் துருவி விபரம் சேகரித்து வருகின்றனர். (28)

## கி.அபி. செயலகம் அமைக்க முடிவு

உடுப்பிட்டி வடக்கு பிரதேசத்தில் கிராம அபிவிருத்தி செயலகம் ஒன்று விரைவில் அமைக்கப்பட இருப்பதாக நிகொட் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

ஆறு கிராமங்களை உள்ளடக்கிய இப் பகுதியில் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகள், மேற் கொள்ளப்பட இருப்பதுடன் உடுப்பிட்டி வடக்கு பிரதேசத்திற்கான மத்திய மருந்தகமும் மகப்பேற்று மருத்துவமனையும் அமைப்பதற்கான திட்டத்தினை யாழ். அரசாங்க அதிபர் ஊடாக இப்பகுதி மக்கள் தமக்கு முன்வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மந்திகை வைத்தியசாலையில்

## மனநோய் வைத்திய விடுதி அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சியில் உள்ள மந்திகை வைத்தியசாலையில் மனநோய் வைத்திய விடுதிக்கான புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது என அவ் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை கூறினார்.

இந்த மனநோயாளர் வைத்திய விடுதியை அமைப்பதற்காக நிக்கொட் திட்டத்தின் கீழ் 69 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

மந்திகை வைத்தியசாலையில் மனநோய் வைத்திய பிரிவை இயக்குவதற்கு ஏற்ற கட்டட வசதிகள் இல்லாமை பெரும் பிரச்சினையாக உள்ளது. இந்தப் பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டி விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இணங்கவே இந் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் மனநோயாளர் விடுதிக்கான புதிய கட்டடம் அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் யாவும் நிறைவு பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (33)

## தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் "ஆட்டுப்பட்டிக் கிராமம்" திறப்பு விழா

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் முதலாவதாகப் புனரமைக்கப்பட்ட யாழ்.மாவட்டத்திலுள்ள கரவெட்டி வடக்கு, துன்னாலை கிழக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப்பங்களிப்புடன் சமுதாய மீள் கட்டமைப் புத்திட்டத்தின் கீழ் "ஆட்டுப்பட்டிக்கிராமம்" கடந்த 14ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டு மக்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் அறுபது இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து நூற்றி நாற்பது ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட இக்கிராமத்தை சமுதாய மீள்கட்டமைப்புத் திட்டப்பணிப்பாளர் இலங்கா நேசன் வைபவரீதியாகத் திறந்து வைக்க, அனைத்து விருந்தினர்களும், கிராம மக்களினால் அக்கிராம வாசலில் வைத்து மலர்மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

தொடர்ந்து இக்கிராமத்தின் கல்வெட்டினை சமுதாய மீள்கட்டமைப்புத்திட்டப் பணிப்பாளர் இலங்காநேசன் திரைநீக்கம் செய்து வைக்க, கிராமத்தை மக்களிடம் வழங்குவதற்கான சான்றிதழை கரவெட்டி பிரதேச செயலர் சத்தியசீலன் கிராமப் புனரமைப்புக் குழுத் தலைவர் சிவலிங்கத்திடம் வழங்கினார்.

ஆசியுரையை யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் தலைவரும், வைத்திய கலாநிதியுமான வை.தியாகராஜா வழங்க, சிறப்புரைகளை பிரதேச செயலர் யாழ். மாவட்ட சமுதாய மீள்கட்டமைப்பு உதவித் திட்டப் பணிப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக்கழக சமுதாய மீள்கட்டமைப்புத் திட்ட இணைப்பாளர் ஆகியோரும் பிரதம விருந்தினர் உரையை சமுதாய மீள் கட்டமைப்புத் திட்டப் பணிப்பாளர் இலங்காநேசன் நிகழ்த்தினார்.

-மருதங்கேணி பிரதேசத்தில்-

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு நடவடிக்கை

மருதங்கேணி பிரதேசத்திலுள்ள தாளையடி,மருதங்கேணி, ஆகிய பகுதிகளில் முதற்கட்டமாக இன்று வியாழக்கிழமை கட்டாக்காலியாகத் திரியும் நாய்கள் நஞ்சூட்டிக் கொல்லப்படவுள்ளன.

மேற்படி பகுதிகளிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் இந்நடவடிக்கை தொடரவுள்ளதால்-இப் பகுதியில் உள்ளோர் தமதுவளர்ப்பு நாய்களை கட்டிவைத்து ஒத்துழைக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலாளர் தி. பசுபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நடவடிக்கையை அடுத்து வளர்ப்பு நாய்களுக்குஅடுத்த வாரம் விசர் நோய் தடுப்பு மருந்துகள் ஏற்றுவதற்கு மருதங்கேணி சுகாதாரப்பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுனாமியால் வீடுகளை இழந்தோருக்கான வீட்டுத்திட்டத்தை துரிதப்படுத்தக்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுனாமி ஆழிப்பேரலை தாக்கத்தினால் யாழ் குடாநாட்டில் 5800 குடும்பங்கள் வீடுகளை இழந்திருப்பதாக யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.இம் மக்களுக்கு வரும் மாரிகாலத்திற்கு முன்னர் நிரந்தர வீடுகளைகட்டிக்கொடுக்கும் வேலைகளைஅரசசார்பற்ற நிறுவனங்கள் துரிதப்படுத்தும் படியும் அந்த தொண்டு நிறுவனங்களிடம் யாழ் அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது.5800நிரந்தர வீடுகளுக்கு பதிலாக தற்போது 4973 வீடுகளை அரசசார்பற்ற நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவற்றுள் 1823 வீடுகள் பருத்தித்துறையிலும் ஏனைய வீடுகள் வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.(28)

## சிறிலங்கா கடற்படையினர் பாஸ் நடைமுறையை கடற்றொழிலாளர் கூட்டாக எதிர்க்க முடிவு

(யாழ்ப்பாண)

யாழ். வடமராட்சியில் கடற்றொழிலாளர்களுக்கான 'பாஸ்' நடைமுறையை சிறிலங்கா கடற்படையினர் வற்புறுத்தலாக அமுல்படுத்த முனைந்தால் யாழ்.குடாநாட்டு கடற்றொழிலாளர்கள் அனைவரும் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதிப்பர். இவ்வாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாச சம்மேளனத்தின் செயலாளர் க.சூரியகுமார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்- வடமராட்சி கடற்றொழிலாளர்கள் அனைவரும் கடற் றொழிலுக்குச் செல்வதற்கான பாஸ்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்றும் பாஸ் பெறாதவர்கள் கடற்றொழிலுக்கு செல்ல அனுமதிக்கப்பட மாட்டார்கள். என்றும் அறிவித்துள்ள கடற்படையினர்.

கடற்றொழிலாளர்களுக்கு வலுக்கட்டாயமாக பாஸ்களை வழங்குவதுடன் பாஸ்களை பெற மறுப்போர் மீது கொலை அச்சுறுத்தல் களையும் விடுத்து வருகின்றனர். எனவே யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர்களை மிரட்டி அவர் களது சுதந்திரமான தொழில் நடவடிக்கைகளுக்கு ஆப்பு வைக்க முயலும் படையினரது பாஸ்நடை முறைகளை ஏற்க முடியாது என்று கூறியுள்ள கடற்றொழிலாளர் சம்மேளன செயலாளர் சூரியகுமார் வலுக் கட்டாயமாக பாஸ் நடை முறையை கொண்டுவருதல் அதனை எதிர்த்து கடற்றொழிலை பகிஷ்கரித்து போராட்டம் செய்யவோம் என்றும் எச்சரித்துள்ளார். (33)

## விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

2005 ஆம் ஆண்டிற்கான பன் முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்ட நிதியில் இருந்து இவ் விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கியதோடு இவ் விளையாட்டுக் கழகங்களில் இருந்து மாவட்ட மாகாண தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களைப் பாராட்டி பரிசில்களும் வழங்கினார்.




வவுனியாவில் நடைபெற்ற வவுனியா வடக்கு கல்வி வலய கல்வி மாநாட்டில் ஆய்வாளர் திரு. சி. சிவராஜா உரையாற்றுவதையும், மாநாட்டில் கலந்து கொண்ட பேராளர்களையும் படத்தில் காணலாம்.

(படம்:- சுபாஸ்கரன்)

# ஓயாத அலைகள்–02 கிளிநொச்சி மீட்பு நடந்ததெவ்வாறு?

## ஏழாம் ஆண்டு நிறைவில் ஓயாத அலைகள் –02

இ.சசிக்குமார்

ஓயாத அலை 02 தாக்குதலை நடாத்துவதற்கான சிறப்பு வேவுச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு முன் னரே விடுதலைப்புலிகளின் வேவுஅணிகள் கிளிநொச்சி இராணுவ முகாம்களிற்குள் ஊடுருவி வேவு செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தன. அதன்மூலம் பெறப்பட்ட பல முக்கிய தரவுகளும் இந்த ஓயாத அலை 02 தாக்குதல் வெற்றிக்கு மூலபல மாகவிருந்தன. அவ்வாறு வேவுச்செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் ஓயாத அலைகள் 02 தாக்குதல் நடவடிக் கைக்கான



தாக்குதல் தளபதி பிரதாபன்

வேவுப்பணியில் அணி ஒன் றுக்குப் பொறுப்பாக விருந்து வேவுநட வடிக்கையில் ஈடுபட்டவரும் தற்போது சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் தாக்குதல் தளபதிகளில் ஒருவருமான பிரதாபன் அன்று தாங்கள் எவ்வாறு எதிரியின் முகாமுக்குள் ஊடுருவினார்கள் என்பதையும் அங்கு எதிரியின் நிலைகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதையும் தாக்குதலுக்கான தகவல்களை எதிரியின் முகாமுக் குள்ளிருந்து எவ்வாறு திரட்டினார்கள் என்பதையும் இவ்வாறு கூறினார்.

கிளிநொச்சி பரந்தன் பகுதிகளை வேவு பார்க்க வேண்டும் என்று எங்களுக்கு ஏற்க னவே கட்டளைத் தளபதி தீபன் அண்ணா வால் சொல்லப்பட்டது. உள்வேவுக்கான




பகுதிகளும் பிரித்து தரப்பட்டன. ஆனால் உள்ளே செல்வதற்கான பாதை இருக்க வில்லை. வெளிலைனைக் (பாதுகாப்பு வேலியை) கடந்து உள்ளே செல்வதற்கான பாதையை நாங்கள் எடுக்கவேண்டிய தேவை இருந்தது.

ஆனையிறவிற்கும் கிளிநொச்சிப்பகுதி மற்றும் பரந்தன் பகுதிகளுக்குள்ளால் உட்செல்வதற்கான பாதை எடுப்பதற்காக ஒரு மாத காலமாக முயற்சி செய்து கொண் டிருந்தோம் பாதை இல் லாததால், கட்டைக் காடு வெற்றிலைக்கேணி யூடாக உள்ளே செல்லுமாறு எமக்கு கட்டளை கிடைத்தது. அங்கு சென்று நீரேரியினூடாக உட்செல்ல முனைந்த போது அங்கே இரவில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு இருந்ததோடு அவதானிப்பும் பலமாக இருந்தது. பிறகு கொம்படி பகுதியால் செல்ல முற்பட்டபோது எதிரியின் தாக்குதலுக்கிலக்காகி திரும்பினோம். இந்த வேளையில்தான் கிளிநொச்சி குளத்தினூடாக மற்றுமொரு அணி எடுத்த பாதையினூடே உட்செல்லு மாறு கட்டளை கிடைத்தது. அங்கும் அந்த அணிக்கு அடி விழுந்து விட்டது. அதனால் குளத்தின் அலை கரையினால் நாங்கள் ஒருபாதை எடுத்து உள்நுழைந்தோம். உள்ளே எங்கு தங்குவது எப்பகுதியால் பயணிப்பது என்று எங்களுக்கு எதுவும் தெரியவில்லை. ஏனென்றால் உள்ளே வயல் வெளிகளும் வெளியான பிரதேசமாகவும் இருந்ததால் மறைவான இடம் கிடைக்க வில்லை. அதனால் முதல் நாள் முழுவதும் நாங்கள் தங்குவதற்கான இடங்களைத் தேடி பாதுகாப்பான ஓர் இடத்தை தெரிவு செய்தோம்.

மறுநாள் அதனுள்ளிருந்து திட்டங்களை வகுத்துக் கொண்டு கரடிப்போக்கு சந்திப் பகுதிக்கு வந்தோம் அங்கு தான் கரடிப்போக்கு முகாம் இருந்தது. அது சிறிய பிரதேசத்தைக் கொண்ட முகாமென நினைத் தோம். ஆனால் கரடிப்போக்கிலிருந்து கிளிநொச்சி வைத்தியசாலை வரைக்கும் அந்த தொடர்முகாம் அமைந்திருந்தது.

அங்கிருந்து புகையிரத வீதியினூடாக குறிப்பிட்ட பகுதியை அவதானித்து விட்டு மறுநாளும் உள்ளேயே தங்கினோம், அடுத்த நாள் முதல் நாள் விட்ட இடத்தி லிருந்து அவதானிப்பை தொடர்ந்தோம். இவ்வாறு அந்த முகாமின் புகையிரதவீதிப் பகுதியின் சுற்றளவை எடுக்க மட்டும் 07 நாட்கள் எடுத்தன. ஏனென்றால் கரடிப் போக்கு சந்தியிலிருந்து பரந்தன் நோக்கி 700 மீற்றரில் இன்னுமொரு இராணுவ முகாமிருந்தது. அந்த முகாமிற்கும் கரடிப் போக்கு முகாமுக்கும் இடையால் இறங் கியே நாங்கள் வேவுபார்க்க வேண் டியிருந் தது.

அந்த ஒரு கிழமை முடிந்ததும் எடுத்த தரவுகளுடன் கட்டளைத்தளபதி தீபன் அண்ணாவிடம் வந்தோம். பிறகு அடுத்த கட்ட நடவடிக்கைக்கான திட்டங்களை எமக்கு தந்தார். அதற்கேற்ப நாங்கள் இரண்டாவது முறை உட்புக முயன்ற போது முதல் சென்ற பாதையில் இராணுவத்தின் அவதானிப்பு அணி நிறுத்தபபட்டிருந்தது.

அதனால் அந்த பாதையிலிருந்து 50மீற் றர் விலத்தி ஒரு பாதையை எடுத்து உள்ளே சென்றோம் அங்கு திட்டப்படி முதல் கட்டத்தில் விட்ட பகுதியிலிருந்து முகாமின் சுற்றளவை பார்த்தோம். அதன்பிறகு வெளியே வந்து மூன்றாவது முறை உட் சென்று திருநகர் பகுதியில் இருந்த முகாம் களை அவதானித்தோம். பழைய மஞ்சுளா



வெதுப்பகத்தடியில் ஒரு முகாமும் 6ஆம் வாய்க்கால் சந்தியில் ஒரு முகாமும் கோழிப்பண்ணை வீதியில் ஒரு முகாமும் இருந்தன. இவற்றோடு 3 ஆம் வாய்க்கால் வீதியிலும் ஒரு முகாம் இருந்தது. இவை கிளிநொச்சி பிரதான தளத்திற்குரிய பாதுகாப்பு முகாம்களாக அமைந்திருந்தன. இவற்றை நாங்கள் பார்த்த சமகாலத்திலேயே மற்றுமொரு அணி பரந்தன் பகுதியை பார்த் துக் கொண்டிருந்தது. நாங்கள் பார்த்த பகுதியின் முழுமையான தரவும் எடுக்கப்பட்டு விட்டது. இதற்கிடையில் இரவில் வேலை செய்வது இலகுவாக இருந்தபோதும் பக லில் உள்ளே தங்குவதென்பது கடினமாகவே இருந்தது. கிளிநொச்சியின் கட்டடப்பகுதிக் குள் இராணுவத்தினர் இருந்தனர். ஏனைய பகுதி வெளியானவை. அதனால் நாங்கள் தங்குவதற்காக சில இடங்களை பிரித்து வைத்திருந்தோம். அதாவது 3ஆம் வாய்க்கால் அருவிக்கருகில் உள்ள சில இடங்களிலும், அடுத்து கோழிப்பண்ணை வீதியின் இடது பக்கத்தில் ஒரு இடத்திலும், திருநகர் சுடலைக்குள்ளிருந்த பற்றைக் குள்ளும் பரந்தனுக்கும் ஆனையிறவுக்கும் இடையில் ஒரு பகுதியிலும் தங்குவதற்கான பகுதிகளை பிரித்திருந்தோம்

வீதியோரமாக நாங்கள் தங்கியிருந்த வேளை பகலில் இராணுவத்தின் நடமாட்டம் அதிகரித்திருக்கும் அதிலே நாங்கள் சாப்பிடுவதற்குக் கூட பெரும் சிரமமாகவே இருந்தது. ஏனைய பகுதிகளில் இருந்த புற்கள் பற்றைகள் கூட எரிக்கப்பட்டி ருந்தன. ஏனென்றால் வேவுக்காக நாங்கள் இறங்கிவிட்டோம் என்பதை எதிரி தெளிவாக உணர்ந்திருந்தான். அதனால் ஒவ்வொரு நாளும் தேடுதலில் ஈடுபட்டே வந்தான். இதனால் கிளிநொச்சியில் இரவு வேளைகளில் வேலை செய்துவிட்டு பகலில் தங்குவதற்காக ஆனையிறவுப்பகுதிக்கு வந்து தங்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

நாங்கள் மூன்று தடவைகள் உள்ளே சென்று ஓரளவு வேலைகளை முடித்திருந்த போதும் சிலபகுதிகளின் வேலைகள் நிறைவு பெறவில்லை. எமது திட்டம் கிளிநொச்சிப் பகுதியைக் கட்டம் கட்டமாக பிரித்து மறித்துத் தாக்குதலை மேற்கொள்வதே. எனவே அதற்கான சரியான பகுதிகளை உறுதிப்படுத்த வேண்டியதேவை இருந்தது. நாங்கள் மூன்றாம் நாள் அந்த வேலையை முடிக்க முன் வெளியே வந்துவிட்டு அடுத்த தடவை செல்ல முற்பட்ட போது பாதையில் எதிரியின் பதுங்கித்தாக்கும் அணிகள் நிறுத்தப்பட்டிருந்தன இதனால் மீண்டும் வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டினூடாக உள்ளேவருமாறு கட்டளையிடபபட்டது. அந்தப்பகுதியால் வருவதற்கு புதிதாக பாதை எடுத்தே வரவேண்டியிருந்தது. அத னால் ஒரு மாதம் அப்பகுதியில் தாமத மானது.

அங்குநின்ற செம்பியன் வேவு அணியின் பாதையினாலேயே நாம் உள்ளே நுழைந் தோம். ஆனால் நாம்சென்ற அப்பாதை எதிரியின் காப்பரணுக்குள் தான் செல்லும் ஆனால் அந்தக்காப்பரண்களில் இருக்கும் இராணுவம் முனனுக்கு வந்து நிற்பதால் அந்த அரண்கள் வெறுமையாக இருந்ததால் நாம் அந்தப் பகுதியால் உள்நுழைந்தோம்.

உள்நுழைந்த போதும் ஆனையிறவு தொடக்கம் கிளிநொச்சி வரையுள்ள இராணு வமுகாம்களை கடந்தே வரவேண்டி யிருந்தது. அன்று அதிகாலையில் பரந்தன் வீதியைக் கடக்க முடியவில்லை உமையாள் புரப்பகுதி பற்றைக்குள் தங்கிவிட்டோம் அன்று காலைதான் எமக்குத் தெரிந்தது. அப்பகுதியில் இராணுவத்தின் தேடுதல் அதிகமாக நடைபெறும் பிரதேசமென்று.

அன்று தேடுதலுக்காக வந்த இராணுவத் தினர் நாய்களையும் கொண்டு வந்திருந்தனர். நாய்கள் எங்களை கண்டு குரைக்கத் தொடங்கின. ஆனால் இராணுவம் அதைப் பொருட்படுத்த வில்லை. அன்று இரவு கிளிநொச் சிக்கு வந்து முன்னர் விட்ட மிகுதி வேலையை ஆரம்பித்தோம் நான்கு நாட்களுக்குள் வேலையை முடித்துக் கொண்டு தட்டுவன் கொட்டியையும் கடந்து போய்க் கொண்டிருந்தோம். அப்போது பதுங்கியிருந்த இராணுவஅணிஒன்று எங்களைத் தாக்கியது. நாங்களும் திருப்பி தாக்கிக் கொண்டு ஓடினோம். ஒரு போராளி காயப்பட்டு விட அந்த சண்டையோடு வெளி யால் வந்து விட்டோம். வந்தவுடன் வெளி யில் நின்ற எதிரியின் ஒரு அணியுடனும் சண்டை பிடித்துத்தான் வந்து சேர்ந்தோம். இதேவேளையில் பரந்தன் பகுதியில் வேலை செய்த எமது அணியும் அன்று வெளிவரமுயற்சி செய்து இராணுவத்தின் தாக்குதலுக்கு உள்ளாகியது. அவர்கள் முட் கள் நிறைந்த பகுதியால் ஓடி மறுநாள் கால்களில் முட்கள் குத்தி நடக்க முடியாத நிலையில் பனை மட்டைகளை வெட்டி காலில் செருப்பு போல கட்டிக்கொண்டு நடந்து வந்து சேர்ந்தார்கள்எனக் கூறினார்.

(தொடரும்....)

# வீராவேசப் பேச்சுக்களால் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது

இலங்கையின் பொருளாதாரம் மற்றும் அரசியல் மாற்றங்கள் குறித்து நாட்டில் ஏற்படும் நிகழ்வுகளை அநேகமாக வர்த்தகப் பிரமுகர்கள் எப்பொழுதும் கவனித்துக்கொண்டிருக்கின்றார் கள். இரண்டு மூன்று வருடங்களாக நாட்டின் பொருளாதாரதத்தில் வளர்ச்சி ஏற்படவில்லை. அதாவது நாட்டில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினை காரணமாக பொருளாதார முன்னேற்றத்தில் மந்தகதி ஏற்பட்டுள்ளது. இதற் கான முழுப்பொறுப்புக்களையும் நாட்டின் அரசியல் வாதிகள் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதோடு சுனாமிப்பேரழிவுகள் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் சீரழிவுக்குக் கொண்டு சென்றுள்ளது.இவற்றை வைத்துக் கொண்டு கொளுந்துவிட்டெரியும் இனப்பிரச் சினையைத் தள்ளிப்போடுவதன் மூலம் மேலும் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதுடன் மக்க ளின் எதிர்ப்புக்களை அரசாங்கம் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றது.

தற்போதைய அரசு சுனாமிப் பேரழிவுக்கு




முன் நாட்டின் வரவுசெலவுத்திட்டத்தை அறிவித் தது. இந்த வரவுசெலவுத்திட்டத்தில் நிறை வேற்ற முடியாத சில விடயங்களும் இருந்தது. நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றாமல் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்குதல், இன்றைய பொருளாதாரத்தில் முக்கிய பங்கினை வகிக்கும் மின்சார சபையை மறுசீரமைக்காமல் மேலும் இச்சபைக்குப் பழுவை அதிகரிக்கச் செய்யும் திட்டங்களைத் திணித்தல், போன்றவற்றை அரசு நடை முறைப்படுத்திக் கொண்டுள்ள வேளையில் சுனாமிப்பேரலை ஏற்பட்டதால் இதை வைத்துக் கொண்டு மின்சாரசபையின் பிரச்சினையைத் தற்பொழுது அரசு இழுத்தடித்துக்கொண்டு வரு கின்றது. இந்த சனாதிபதித்தேர்தலில் ரணில் வெற்றி பெற்றாலும் மகிந்தராஜபக்ஷ வெற்றி பெற்றாலும் நாட்டில் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கும் பொருளாதாரப் பிரச்சினையை இவர்கள் பொறுப்பேற்க வேண்டும். இந்தக் கஷ்ரமான கேள்விகளுக்கு நாட்டில் தலை மைப்பதவியை ஏற்கப்போகும் சனாதிபதி அவர் கள் முழுப்பொறுப்புக்களையும் ஏற்கவேண்டும்.

2004ஆம் ஆண்டு இந்த நாட்டில் தேர்தலை எவரும் எதிர்பார்க்கவில்லை. அதிகபெரும் பான்மைப்பலம் உள்ள ஐக்கியதேசியக் கட்சியைக் கலைத்து அவர்களால் கொண்டுவரப் பட்ட பொருளாதாரக் கொள்கைகளை மாற்றி அமைத்து இனிய வார்த்தைகளாலும் ஆவேசமான மேடைப் பேச்சுக்களாலும் மக்கள் ஏமாற்றப்பட்டனர். மக்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களித்தனர். ஆனால் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மேற்கொண்டபடியால் மக்கள் நாட்டில் பயமின்றி போக்குவரத்துசெய்தனர். இந்த ஒப்பந்தத்தை சில பிற்போக்கு சக்திகள் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளுக்கு நாட்டை விற்றுவிட்டார் என்று பிரச்சாரங்கள் செய்தன. நாட்டிற்குச் செய்த நன்மைகளை மக்கள் அனுபவிக்கும் முன் ஆட்சியினை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கைப்பற்றியது.

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலின் பின் நாட்டின் நிலைப்பாடு என்ன. சர்வதேச அணுகு முறையைப் பின்பற்றி நாட்டின் அரசியலை நடத்தவேண்டும். சர்வதேச நாடுகளின் உதவிகள் தேவைப்படாது. எமது பொருளா தாரத்தை நாமே கட்டி எழுப்பிக்கொண்டு அரசியலை நடத்த முடியும் என மேடைகளில் சிவப்பு சட்டைகளை மாட்டிக்கொண்டு தொண்டை கிழியக் கத்துவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. சீனா, சோவியத்யூனியன், வியட்நாம் போன்ற நாடுகளும் சர்வதேச அனுசரணையுடன் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பின. எமது அரசியல்வாதிகள் முப்பது வருடங்க ளுக்கு முன்னுள்ள பொருளாதாரத்தைப் பற்றிக் கதைக்கின்றனர். ஆனால் இம்முறை உலக பொருளாதாரக் கொள்கைகளோடு இணைந்து செயற்படப்போகும் உலகம் ஏற்றுக்கொள்ளும் ஒரு தலைவரை தேர்ந்தெடுப்பதே மக்களின் பிரதான நோக்கமாக உள்ளது.

தேர்தல் பிரச்சாரங்கள் ஆரம்பமாவதற்கு முன்னதாக ரணில் விக்கிரமசிங்க நாட்டுமக்க ளுக்கு நல்லதொரு யோசனையை முன்வைத் துள்ளார். தாம் பதவிக்கு வந்தால் நாட்டின் தேசியப் பிரச்சினையைத் தீர்த்துவைத்து எதிர்க் கட்சியினருக்கும் அமைச்சுப்பதவிகள் வழங்கப்போவதாகக் கூறியுள்ளார். அதாவது கூட்டு அரசாங்கத்தின் அடித்தளத்திற்குப் பச்சைக் கொடியைக் காட்டியுள்ளார். இதைப் பல வருடங்களுக்கு முன் நாட்டுமக்களுக்குக் கூறியும் உள்ளார். இந்த நாட்டில் இரண்டு பிரதான கட்சிகள் உள்ளன. ஒன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றது ஐக்கியதேசியக்கட்சி ஏனைய மற்றக்கட்சிகள் யாவும் அரசியல் ஸ்திரத்தன்மையற்ற கட்சிகளாகும். ஆகவே இந்த இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றி ணைந்தால் நாட்டில் 75 சதவிகித அதிகாரத் தைப் பெற்றுக்கொள்ள முடியும். நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு இவர்களுக்கு இந்த அதிகாரம் போதுமான தாகும்.



தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்ப தற்கு முற்படும் பொழுது பலதரப்பட்டவர்களிடம் இருந்து பல அபிப்பிராயங்கள் முன் வைக்கப் படலாம். சனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் கூட்டு அரசாங்கத்தை ஏற்படுத்தி னால் அது நாட்டுக்கும், மக்களுக்கும் மிக நன்மைகளைத் தரும். இரண்டு கட்சிகளும் ஒரே கொள்கைகளைக் கடைப்பிடிப்பார்களா னால் அரசொன்றை அமைப்பதில் எந்தத்தவறு களும் கிடையாது. கூட்டு அரசொன்றை ஏற்படுத் திக்கொள்வதற்கு இரு தலைவர்களும் இதய சுத்தியோடு செயற்படவேண்டும். சொந்த இலாபங்களைக் கருதலாகாது. குரோதங்கள் இருக்கக்கூடாது. நாட்டின் தேசிய பிரச்சினைக ளுக்கு முக்கியத்துவத்தைக் கொடுக்க வேண்டும்.

எமக்கு வடக்கு கிழக்கு பிரச்சினைகள் மிக முக்கியமானவையாகும். பெரும் சிரமத்திற்கு மத்தியில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டபடியால் இதற்கு முன் நாட்டில் ஏற்பட்ட குண்டுவெடிப்புக்கள்,துப்பாக்கிச் சத்தங்கள் யாவையும் இப்பொழுது மக்கள் மறந்துள்ளனர். 20 வருட கொடூரயுத்தத்தின் பின் 2002ஆம் ஆண்டு செய்துகொண்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தினால் நாட்டு மக்கள் இப்பொழுது நிம்மதியாக இருக்கின்றனர். தற் பொழுது நாட்டில் ஏற்பட இருக்கும் சனாதிபதித் தேர்தலில் யுத்தம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மக்களின் மனதில் பெரும் பீதியை ஏற்படுத்தி யுள்ளது. தான் நாட்டின் சனாதிபதியாக வந்தால் பேச்சுவார்த்தைகள் மூலம் அதிகாரத்தைப் பரவலாக்கி நாட்டின் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். பிரதமர் ராஜபக்ஷ வெற்றிபெற்றால் வேறுவி தமாக பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதாகக் கூறுகின்றார். அவர் ஜே.வி.பி.யுடன் செய்து கொண்டுள்ள உடன்பாட்டின் படி சுனாமி நிவாரணச் சபையைக் கலைத்தல், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்தல், நோர்வே சமாதான ஏற்பாட்டாளர்களை நாட்டை விட்டு வெளியேற்றுதல் இதுபோன்ற பல நிபந்தனை களை வரவேற்று அதற்குக் கையொப்பம் இட்டுள்ளார். சுனாமி மீள் கட்டமைப்பு நிர்மாணப் பணிகள் மற்றும் புனரமைப்புப்பணிகளை தன்னிச்சைப்படி அமுல்படுத்தப்போனால் நாட்டில் பெரும் பிரச்சினைகள் ஏற்படும். மற்றும் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்தப்போவதாகக் கூறுகின்றார். வாயளவில் கூறியுள்ளார். ஆனால் அதை அவரால் செயற்படுத்தமுடியாது.

விடுதலைப்புலிகளின் தலைவரின் உடன்பாடு இல்லாமல் இவரால் இந்நாட்டில் எதுவும் செய்யமுடியாது. மேடைகளில் ஏறி தொண்டைகிழியக் கத்தும் அரசியல் வாதிகள் இதைச்செயற்படுத்துவார்களா? பிரபாகரன் அவர்களின் சரித்திரத்தை இதுவரை படித்திருக்க மாட்டார்கள் என நம்புகின்றேன். தனி ஒருவரால் இப்பிரச்சினையைத் தீர்த்துவைக்கமுடியாது. பிரச்சினையின் தன்மைகளை உணர்ந்து கொண்டு அதற்கேற்ப பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும். இதில் பிரதமர் அவர்கள் மிக அவதானமாகச் செயற்படவேண்டும். சிறி லங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி செய்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தெளிவான பொருளாதாரக் கொள்கைகள் கிடையாது. சிலவேளைகளில் தேர்தலுக்காக விசேடமாக பொருளாதாரத்திட்டத்தைத் தயாரிக்கப்போகிறார் களா என்பதும் தெரியாது. எமது பொருளாதா ரத்தை சர்வதேசம் ஏற்று அங்கீகரிக்க வேண்டும். பலம்மிக்க பொருளாதாரம் எமது நாட்டில் கிடையாது. ஆகவே உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங் களின் அனுசரணையில்லாமல் எமது பொருளா தாரத்தை முன்னெடுக்க முடியாது. இவை யாவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்கொள்கை முன்னெடுப்புத்திட்டங்களில் உள்ளடக்கப்பட வில்லை. அப்படியாயின் ஜே.வி.பியினரும் பிரதமர் ராஜபக்ஷவும் செய்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பொருளாதாரத்திட்டங்கள் எப்படிப்பட்டவை என்பதை பிரதமர் நாட்டு



மக்களுக்கு அறிவிக்கவேண்டும்.

இம்முறை சனாதிபதித் தேர்தலின் பொழுது கடந்த காலங்களில் நாட்டின் பொருளாதாரம் எந்த நிலையில் இருந்தது. இதில் நாடு எவ்வளவு முன்னேற்றத்தை அடைந்தது. இவற்றைப் பொதுமக்கள் இலகுவில் மறக்க மாட்டார்கள். ஆனபடியால் ஒவ்வொருவர் மீது தனிப்பட்ட குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவது பிழை. எதிர்காலத்தில் இவை நடைபெறா வண்ணம் பார்த்துக்கொள்வது இன்றைய அரசி யல் வாதிகளின் கடமையாகும். யுத்தத்தினால் எமது நாட்டில் பல்லாயிரக்கணக்கான இளை ஞர்கள் உயிர் நீத்துள்ளார்கள். இதைக் கருத்திற் கொண்டு மேடைப்பேச்சுவீரர்களின் வார்த்தை களுக்கு மயங்கி நாட்டைக் குட்டிச்சுவராக்காமல் இம்முறை நல்லதலைவரைத் தெரிவு செய்வது மக்களின் கடமையாகும்.

லங்காதீப சிங்கள நாளிதழ்
ஹட்டன் தேசிய வங்கித்தலைவர்
ரியன்சி விஜேதிலக்க
**மொழியாக்கம்:- அ.சக்திவேல்**

தென்பகுதி பெரும்பான்மை சிங்கள தலைவர்கள் இந்நாட்டின் சிறுபான்மையினரின் உரிமைகளை வழங்காமல் அதைப் புறந்தள்ளிவிடுவார்கள். இதனைப் பின்னர் மேடைகளில் வீராவேசமாகப் பேசி மக்களின் கைதட்டலையும் பெற்றுக்கொள்வர். ஆனால் இதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாதென்பதை பெரும்பான்மை சிங்கள இனம் தெரிந்துகொள்ள வேண்டும். வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற நிலைப்பாட்டை மறந்துவிடவேண்டும். அப்படித் தன்னிச்சைப்படி நாட்டின் தலைவர்கள் நடந்துகொள் வார்களா னால் நாட்டின் பேரழிவைத்தவிர வேறு எதுவும் இவர்களால் செய்ய முடியாதென்பதை தயவு செய்து இவர்கள் உணர்ந்து செயற்பட்டால் எல்லோரும் நிம்மதியாக இந்த நாட்டில் வாழ முடியும்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

பெருந்தெருக்கள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# கேள்வி கோரல்கள்

சிறிய அளவிலான உட்கட்டுமானப் புனரமைப்புக்கும் தரமுயர்த்தலுக்குமான திட்டத்தின் (SIRUP) கீழ் உள்ள வேலைகள்

சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் (JBIC)நிதி வழங்கல்கள்

## உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

01 கீழே குறிப்பிடப்பட்ட திட்டங்களிற்கான மூடிய கேள்விகோரல்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கேள்விச்சபையின் சார்பாக பொதுமுகாமையாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை பெற்றுக்கொள்வார்.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 12.10.2005 அன்று பிற்பகல் 2.00 மணியுடன் முடிவடையும்.

கேள்விப்பத்திரங்கள் மாகாணப்பணிப்பாளர் /வ – கி(வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா அலுவலகத்தில் கிடைக்கும் படிவத்தில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஒவ்வொரு வேலைத்திட்டத்திற்குமான கேள்விப்பத்திர ஆவணங்கள் 22.09.2005 தொடக்கம் 07.10.2005 வரை மீள் அளிக்க முடியாத கேள்வித்தொகையான 1,725.00 (பெறுமதி சேர்வரி உள்ளடங்கலாக) செலுத்திப் பெற வேண்டும்.

| தொடர் இல | வேலை விபரம் | தகுதிப்பிரமாணம் | பாதுகாப்புப் பத்திர பணத்தொகை |
|---|---|---|---|
| 01 | பருத்தித்துறை-மருதங்கேணி வீதியின் 12.0-16 கி.மீ பகுதியை மீள் கல்பரப்பி தார் ஊற்றி திருத்துதல். | தற்போது செல்லுபடியாகும் ICTAD தரம் எம்-4 அல்லது அதற்கு மேல் செல்லுபடியாகும் NCASL உறுப்புரிமை. | 250,000.00 |
| 02 | புத்தூர்-மீசாலை வீதியின் 0.00-13.68 கி.மீ பகுதியை புனர்நிர்மாணம் செய்தல். | தற்போது செல்லுபடியாகும் ICTAD தரம் எம்-3 அல்லது அதற்கு மேல் செல்லுபடியாகும் NCASL உறுப்புரிமை. | 1,000,000.00 |
| 03 | யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியின் 0.0-8.0 கி.மீ பகுதியை தார் ஊற்றி சீர் செய்தல். | தற்போது செல்லுபடியாகும் ICTAD தரம் எம்-3 அல்லது அதற்கு மேல் செல்லுபடியாகும் NCASL உறுப்புரிமை. | 600,000.00 |
| 04 | மானிப்பாய்-கைதடி வீதியின் 0.0-13.67 கி.மீ பகுதியை புனர்நிர்மாணம் செய்தல். | தற்போது செல்லுபடியாகும் ICTAD தரம் எம்-3 அல்லது அதற்கு மேல் செல்லுபடியாகும் NCASL உறுப்புரிமை. | 900,000.00 |

02 நிறைவேற்றும் நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையாகும்.

03 தகுதிவாய்ந்த கேள்வி கோரல்களைக் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களிற்கு இணங்குதல் வேண்டும்.

அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணத்துறையில் பொருத்தமான மேலே குறிப்பிடப்பட்ட தரங்களிற்கேற்ப பதிவு செய்திருந்தல் வேண்டும்.

ஆ) கேள்வி கோரல் கோருபவர் இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் செல்லுபடியாகும் ஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக்கொள்ளும் பொழுதும் ஒப்பந்தத்தை வழங்கும்பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும்.

04 கேள்விகோரல் ஆவணங்களை மாகாணப்பணிப்பாளர் வ – கி(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம் /வவுனியாஅலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிடலாம்.

05 கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவுறும் திகதியிலிருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாகும்.

06 கேள்விப்பாதுகாப்பு பணத்தொகைகளுக்குரிய பத்திரங்கள் மேலே குறிப்பிடப்பட்டபடி கேள்விப்பத்திர ஆவணங்களுடன் இணைந்திருத்தல் வேண்டும். செல்லுபடியாகக் கூடிய பாதுகாப்புப் பணப்பத்திரங்களைக் கொண்டிராத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07 முன் கேள்வி கோரல் கூட்டம் 30.09.2005 அன்று காலை 10.00 மணிக்கு மாகாணப்பணிப்பாளர் வ – கி(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா அலுவலகத்தில் நடைபெறும்.

08 மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்களின் இரு பிரதிகள் பொதுமுகாமையாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை முதலாவது மாடி "செத்சிறிபாய" பத்தரமுல்ல அலுவலகத்திற்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ முடிவு நேரத்திற்கு முன்பாக சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

09 கிடைக்கப் பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின்பு உடனடியாக பொதுமுகாமையாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை முதலாவது மாடி "செத்சிறிபாய" பத்தரமுல்ல அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும். கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லதுஅவரது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

10 மேலதிக விபரங்களிற்கு தயவுசெய்து மாகாணப்பணிப்பாளர் வடக்கு கிழக்கு (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் 024 – 2222826 அல்லது 021 – 2222[illegible]7 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,

வீதி அபிவிருத்தி அதிகாரசபை. (சி.12840)

# அரசு கோரினால் தேர்தலில் போ.நி. க. குழு பங்கேற்கும்!

## -பேச்சாளர் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் கோரிக்கை விடுத்தால் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலின் போது போர்நிறுத்தக்கண்காணிப்பு குழு முக்கிய கடமைகளை ஆற்றவுள்ளதாக அதன் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் வாக்களிப்பின் போது தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் இருந்து வரும் வாக்காளர்கள் இம்சைக்கு உள்ளாகாத வகையில் இந்தக் கண்காணிப்பு பணிகள் அமையுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கப்படையினருக்கும் இடையிலான சோதனைச் சாவடிப்பகுதிகளில் இந்தப்பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பேச்சாளர் ஹெலன் ஒல்ப்ஸ்டோட்டியர் தெரிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தலின் போது போர் நிறுத்தக்கண்காணிப்பு குழு சில கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தது.

## 03 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:-1937-06-14
இறைவன் அடியில்:-2002-09-22

அமரர்
திருமதி- மரியரெத்தினம் கிருஸ்ணன்
(ஓய்வுபெற்ற உதவி ஆசிரியர்)

பாசத்தின் இருப்பிடமே,
பண்பின் சிகரமே
நீவிர் எம்மை
விட்டுப்பிரிந்து ஆண்டுகள்
மூன்று ஆனாலும்
எம்நெஞ்சில்
இடம்பெற்றுவிட்டீர்
உமது பிரிவுக்காக
கண்ணீர் விடாத கண்கள்
இல்லை ரணப்படாத
இதயங்கள் இல்லை.
ஒவ்வொரு மனிதனும்
ஆரோ ஒருவருக்காக
கண்ணீர் விட்டபடி
இருப்பார்கள்
அந்தவகையில் எங்கள்
கண்ணீர்
மரியரெத்தினத்துக்காகவே
இருக்கும்.

என்றும் உம் பிரிவுத்துயரால்
மனம் கொதிக்கும் கணவன்,
ஏகபுதல்வி, பேரன் (மேனு)

தற்காலிக முகவரி:-
இல:-37/1 குடியிருப்பு,
வவுனியா.

தகவல்:- கே. கிருஸ்ணன்,
கே. எம். கிறிசாந்தி.

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
20
07
1975



வீரச்சாவு
22
09
1996

லெப்டினன்ட் இளங்குமரன்
பாலசுப்பிரமணியம் பாலேந்திரன்
செல்விபுரம், பூநகரி

தாய் மண்ணின் விடிவிற்காய்
தாய் மடியில் தவழ்ந்தவனே
பெருந்துயரம் கொள்ளவைத்து
பாலேந்திரா எங்கே சென்றாய்
கல்லறையில் துயிலுகின்ற
கண்ணின் மணியே பாலேந்திரா
ஒன்பதாண்டு சென்றாலும்
ஓங்கி நிற்கும் உன் நினைவு

முகவரி:-
ஸ்கந்தபுரம்,கிளிநொச்சி (6726)

தகவல்:-குடும்பத்தினர்

# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்கு தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

*பணிநிலை:-* ஊர்தி ஓட்டுநர் தரம் -03

*தகமைகள்:-* 01. க.பொ.த (சா/த) தேர்வில் ஆகக்குறைந்தது 04 பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

02. ஊர்தி ஓட்டுநர் அனுமதிப்பத்திரம்உடையவராக இருத்தல் வேண்டும்.

03. ஆண்பாலார் மட்டும்.

*அகவை எல்லை:-* 25-35 வருடங்கள்.

*மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:-* 3,310-4,510 / 60 ❖ 20 + 6,000

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்கு தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும் கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் இரத்தினம் மேல்மாடி, யாழ்சாலை, கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப்பணியக மனிதவளப்பகுதிக்கு 27.09.2005 ஆம்நாள் செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
02. ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.
03. ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.
04. நற்சாட்சிப் பத்திரங்கள்.
05 ஊர்தி ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் (Vehicle Driving Licence)

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.12836)


# தமிழ்நாட்டில் தி.மு.க தலைமையில் கூட்டணி ஆட்சி அமைய வேண்டும்

## தமிழ்நாடு காங். முன்னாள் தலைவர் தெரிவிப்பு

தி.மு.க தலைமையில் கூட்டணி ஆட்சி அமைய வேண்டுமென்று தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் சட்மன்ற உறுப்பினருமான பாலகிருஷ்ணன் கூறியுள்ளார்.

அவர்சென்னையில் செய்தியாளர்களுக்கு இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், இக்கூட்டணி ஆட்சியில் காங்கிரஸ், கம்யூனிஸ்டுக்கள், பா.ம.க, ம.தி.மு.க போன்ற கட்சிகள் இடம் பெறுவது பொருத்தமாக இருக்கும் என்றார். மத்தியில் காங்கிரஸ் தலைமையில் கூட்டணி ஆட்சி வெற்றிகரமாக நடைபெறு வதைச் சுட்டிக்காட்டிய அவர், தி.மு.க தலைவர் கருணாநிதி தேசிய சிந்தனையுடையவர் என்றார்.

# நக்கீரன் கோபால் மீது குற்றப் பத்திரம் தாக்கல்

நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் கோபால் மீது பொடோ சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சென்னை உயர் நீதிமன்றம் அளித்துள்ள அனுமதியின்பேரில் குற்றப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் பூந்தமல்லியிலுள்ள பொடோ சிறப்பு நீதிமன்றத்தில் இக்குற்றப்பத்திரிகையினை நேற்று முன்தினம் தாக்கல் செய்துள்ளனர்.

தடைசெய்யப்பட்ட தீவிரவாத அமைப்புக்களுக்கு ஆதரவான வாசகங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

# சந்திரனுக்கு ஆளில்லாவிண்கலம் ஏவுவது குறித்து மன்மோகன்சிங் ஆவல்

சந்திரனுக்கு ஆளில்லாத விண்கலத்தை அனுப்புவதன் மூலம் சர்வதேச அளவில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி ஆய்வுகள் மேலும் உயரும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கூறியுள்ளார்.

நேற்று சிறிஹரி கோட்டாவிலுள்ள சர்ரீஸ் பவான் விண்வெளி ஆய்வு மையத்தில் சரீஸ் பவார்னின் உருவச்சிலையைத் திறந்துவைத்துப் பேசிய அவர் துருவ செயற்கைக் கோள் செலுத்தும் வாகன மூலம் சந்திராயின-1 என்ற சந்திரனுக்கு ஆளில்லாத விண்கலத்தை ஏவும்நாளை ஆவலோடு எதிர்நோக்கியிருப்பதாகக் கூறியுள்ளார்.இந்தத்திட்டத்தின் மூலம் விண்வெளி பற்றிய பல்வேறு விடயங்களைத் தெரிந்துகொள்ள முடியும் என்றும் பிரதமர் தெரிவித்தார். மனித குலத்தின் நன்மைக்காக சர்வதேச விண்வெளி ஆய்வுத்திட்டங்களுக்கு இந்தியா ஒத்துழைப்பு அளிக்குமென்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.




## உள்ளூராட்சித் திணைக்கள மென்பந்து கிரிக்கெட் போட்டி

# வீதி அ.தி. அணியும், நீர்ப்பாசன தி. அணியும் நேற்றைய போட்டிகளில் வெற்றி!





உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வரும் 15 ஓவர்கள் கொண்ட மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் நேற்று நடைபெற்ற இரு ஆட்டங்களில் வீதி அபிவிருத்தித் திணைக்கள அணியும், நீர்ப்பாசனத் திணைக்கள அணியும் வெற்றிபெற்றன.

கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தில் கச்சேரி அணியை எதிர்த்து ஆடிய வீதி அபிவிருத்தித் திணைக்கள அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய கச்சேரி அணி 13.1 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் புவனேந்திரன் 17 ஓட்டங்களையும், பார்த்தீபன் 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் சதீஸ் மூன்று விக்கெட்டுக்களையும், கோபி இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 50 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய வீதி அபிவிருத்தித் திணைக்கள அணி 12.5 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் தவராசா 11 ஓட்டங்களையும், சதீஸ் பத்து ஓட்டங்களையும் பெற்றனர். மற்றும் கோபி, ஜெயவீரசிங்கம் ஆட்டமிழக்காது முறையே எட்டு, ஆறு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஆனந், சுதர்சன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதேவேளை, கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் பார ஊர்திச் சங்க அணியை எதிர்த்தாடிய நீர்ப்பாசனத் திணைக்கள அணி வெற்றிபெற்றது.

முதலில் ஆடிய நீர்ப்பாசனத் திணைக்கள அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் தினேஷ் 42 ஓட்டங்களையும், சஞ்சயன் 18 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றனர். பந்து வீச்சில் சீலன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு ஆடிய பார ஊர்திச் சங்க அணி 14.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. துடுப்பாட்டத்தில் மயூரன் 29 ஓட்டங்களையும், சீலன், ரத்தினகரன் தலா 18 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் துஷ்யந்தன் நான்கு விக்கெட்டுக்களையும், உதயசீலன் மூன்று விக்கெட்டுக்களையும், நந்தகுமார் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டிக்கு நடுவர்களாக சசிசராஜ், ஆனந்தராஜா, ஆகியோர் மத்திய கல்லூரியில் நடந்த போட்டிக்கும், லெனின், சுபானந் ஆகியோர் கிளி. பொதுவிளையாட்டு மைதானத்தில் நடந்த போட்டிக்கும் கடமையாற்றினர்.

## பாடசாலை அணிகள் கலந்துகொள்ளும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

கிளி. மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கமும், விளையாட்டு அபிவிருத்திச் சங்கமும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளன. எனவே, இதில் பங்குபற்ற விரும்பும் அணிகள் பாடசாலை மட்டத்தில் ஓர் அணியினர் என்ற அடிப்படையில் பங்குபற்றுதல் வேண்டும்.

பங்குபற்றி வெற்றியீட்டும் அணியினருக்கு முதலாவது பரிசாக வெற்றிக் கிண்ணமும், 10,000 ரூபாவும், இரண்டாம் பரிசாக வெற்றிக் கிண்ணமும் 5,000 ரூபாவும் வழங்கப்படும் என்றும், விண்ணப்பங்களை செயலக விளையாட்டு உத்தியோகத்தரிடம் கையளிக்குமாறும் மேற்படி சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

## வவு.கல்மடு ம.வி.-புளியங்குளம் ம.வி. மென்பந்துப் போட்டி!

வவுனியா கல்மடு மகாவித்தியாலயத்திற்கும் புளியங்குளம் மகாவித்தியாலயத்திற்கும் இடையிலான மாபெரும் மென்பந்து போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெற இருக்கின்றது. இந்தப் போட்டியானது எதிர்வரும் காலத்தில் கடினப் பந்தாக மாற்றப்படும் என்றும் ஆண்டு தோறும் இந்த போட்டி நடத்தப்பட இருப்பதாக கல்மடு மகாவித்தியாலய அதிபர் க. செல்வதேவன் தெரிவித்தார். இராணுவ நடவடிக்கையின் போது இந்த இரண்டு பாடசாலைகளும் முற்றாக அழிந்து, 2002ஆம் ஆண்டு மீண்டும் தமது சொந்த இடத்தில் இயங்கி வருகின்றமையும் ஒரு பாடசாலை இராணுவ கட்டுப்பாட்டு பகுதியிலும் மற்றொன்று விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)

## யாழ்.கல்விக் கோட்டங்களுக்கிடையிலான 18 வயதுப் பிரிவு கால்பந்துப் போட்டிகள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட கல்விக் கோட்டங்களில் முதல் தடவையாக 12 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் கோட்ட மட்டத்தில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் கல்விக் கோட்டங்களின் உடற்கல்வி ஆசிரியர்களான சுஜ் சுயாளன், க. சிவகுமார் ஆகியோர் யாழ்ப்பாணம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. குமாரசாமியுடன் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

முதல் தடவையாக இப்போட்டி இக்கல்விக் கோட்டங்களில் இடம்பெறுகின்ற போதிலும் ஒவ்வொரு கோட்டத்தில் இருந்தும் சுமார் பத்துக்கும் மேற்பட்ட பாடசாலை அணிகள் ஒவ்வொரு கோட்டத்தில் இருந்தும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஏற்கனவே, வலிகாமம் மற்றும் வடமராட்சியிலும் கோட்ட மட்டத்தில் 12 வயதுப் பிரிவினருக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெறுகின்ற போதிலும் வலய மட்டத்தில் இடம்பெறுவதில்லையென்பதும் குறிப்பிடக்கூடியதாகும். (41)

## யங்ஹென்றீஸ், யங்கம்பன்ஸ் அணிகள் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி

(யாழ்ப்பாணம்)

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகம் 14 ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகமும் கம்பர் மலை யங்கம்பனஸ் விளையாட்டுக்கழகமும் வெற்றி பெற்று இரண்டாம் சுற்று ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் இளவாலையங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம், எதிர்த்து விளையாடிய புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகத்தை 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

இதேவேளை நடைபெற்ற மற்றைய ஆட்டம் ஒன்றில் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர்த்து விளையாடிய விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை 4-2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

இதேவேளை இன்னொரு ஆட்டத்தில் [illegible] செல்லோமஸ் விளையாட்டுக்கழகம், [illegible] விளையாடிய எவரெட்ஸ் விளையாட்டுக் கழகத்தை 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது. (கீ)

## சிறிலங்காவுடனான இரண்டாவது டெஸ்ட்

# இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க பங்களாதேஷ் போராட்டம்!



சிறிலங்கா - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க பங்களாதேஷ் அணி போராடி வருகின்றது.

இரண்டாம் நாளான நேற்றைய ஆட்டநேர முடிவின்போது பங்களாதேஷ் அணி இரண்டாவது இனிங்சில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது.

சிறிலங்கா அணியின் முதல் இனிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையான 457 இற்குப் பதிலளித்தாடிய பங்களாதேஷ் அணி 191 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் அஸ்ரபுல் அதிகபட்சமாக 49 ஓட்டங்களைப் பெற்றார். டி. பெர்னாண்டோ ஐந்து விக்கெட்டுக்களையும், முரளிதரன் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.


முதலாவது இனிங்ஸ் முடிவில் பலோவோன் நிலைக்குத் தள்ளப்பட்ட பங்களாதேஷ் அணி மீண்டும் துடுப்பெடுத்தாட வேண்டிய நிலைக்கு உள்ளானது. இந்நிலையில் பங்களாதேஷ் அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது. சகரிய நபீஸ் 51 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அஸ்ரபுல் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளார். பந்து வீச்சில் பெனாண்டோ இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

# இந்தியாவுடனான 2ஆவது டெஸ்ட்; நெருக்கடியில் சிம்பாப்வே!

விளையாட்டு

(ஹராரே)

இந்திய - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சிம்பாப்வே அணி பெரும் நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளது. இரண்டாவது நாளான நேற்று ஆட்ட நேர முடிவில் 39 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களை அது இழந்திருந்தது.



முதலாம் நாள் ஆட்டநேர முடிவில் 195இற்கு ஒரு விக்கெட்டை இழந்த நிலையில் இருந்து நேற்று ஆட்டத்தைத் தொடர்ந்த இந்திய அணி 366 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. கௌதம் கம்பீர் 97 ஓட்டங்களையும், ராகுல் ராவிட் 98 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரீக் ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து தனது இரண்டாவது இனிங்சைத் தொடர்ந்த சிம்பாப்வே அணி 39 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களை இழந்து பெரும் நெருக்கடியான நிலையில் உள்ளது. பதான், சகீர்கான் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதற்கு முந்திய போட்டியில் இரண்டு இனிங்சிலும் அரைச்சதங்கள் பெற்ற சிம்பாப்வே அணித் தலைவர் தைபு இப்போட்டியில் முதல் இனிங்சில் ஓட்டம் எதுவும் பெறாமலும், இரண்டாவது இனிங்சில் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டம் இழந்தமை சிம்பாப்வே அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.



## பாடசாலை அணிகளுக்கிடையிலான கால்பந்து சுற்றுப் போட்டி

யாழ். மாவட்ட கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பமாகவுள்ளன.

கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் பாடசாலை அணிகள் இரண்டாம் சுற்றில் வலய மட்டத்தில் மோதவுள்ளன.

தீவகக் கல்வி வலயத்தில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணைக் கல்விக் கோட்டங்களும், வலிகாமம் கல்வி வலயத்தில் சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை, உடுவில் கோட்டங்களும், யாழ். கல்வி வலயத்தில் கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணக் கோட்டங்களிலும், வடமராட்சி கல்வி வலயத்திலும், பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) கோட்டங்களிலும், தென்மராட்சிக் கோட்டத்திலும் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் வெற்றி பெறும் முதல் மூன்று அணிகளும் வலயப் போட்டிகளில் கலந்து கொள்ளத் தெரிவு செய்யப்படவுள்ளன.

பாடசாலைகளின் விடுமுறையைத் தொடர்ந்து இப்போட்டிகள் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (41)

## புதுடில்லி கொமன் வெல்த் போட்டிகளில் கிரிக்கெட்

2010 ஆம் ஆண்டு இந்திய தலைநகர் புதுடில்லியில் நடைபெறும் பொது நலவாய நாடுகளின் விளையாட்டு விழாவில் கிரிக்கெட்டையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என விளையாட்டு நிகழ்வின் தலைவர் மைக் பென்னல் தெரிவித்துள்ளார்.

ஏழு ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட பொது நலவாய நாடுகள் விளையாட்டில் கிரிக்கெட் இணைத்துக் கொள்ளப்பட்ட போதும் 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் நிகழ்வுகள் அதிக அளவில் இடம்பெற்றதன் காரணமாக கிரிக்கெட் விலக்கப்பட்டது.

பொது நலவாய நாடுகள் விளையாட்டுச் சங்கம் கிரிக்கெட்டை விரும்பிய போதும் இதுவரை சர்வதேச கிரிக்கெட் சபை அதற்கான அனுமதியை வழங்கவில்லை. எனினும் இது தொடர்பான பேச்சுக்கள் நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதுடில்லி விளையாட்டு விழா அமைப்பாளர்களும் இவ் விழாவில் டென்னிஸ், ஜூடோ, பில்லியாட்ஸ், அம்பெய்தல் போன்ற போட்டிகளையும் நடத்த வேண்டும் என கூறியுள்ளனர்.

## சிந்தனைக்கு



தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம்; தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக்கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 22.09.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
natham23 ela@ yahoo.com

# சலுகைகள் கோரவில்லை!

சிறிலங்காவின் பிரதம மந்திரி மகிந்தராஜபக்ஷ சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமக்கு வாக்களிக்குமாறு கோரும் ஆதரவு திரட்டும் கடிதங்களை வன்னி அடங்கலாக உள்ள தமிழ் அரச ஊழியர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார். இக்கடிதத்தில் தாம் அரச ஊழியர்களில் கொண்டுள்ள அக்கறை மரியாதை என்பவற்றையும், தாம் கடந்த காலத்தில் அவர்களுக்குச் செய்த சேவைகளையும் குறிப்பிட்டு– எதிர்காலத்திலும் அத்தகைய சேவைகள் தன்னால் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

திரு. மகிந்தராஜபக்ஷ அவர்கள் எந்த மந்திரிப் பதவிகளை வகித்தார், அவர் அப்பொழுது என்னென்ன சேவைகளைச் செய்தார் என்பது தமிழ் மக்களுக்கு முக்கியமானதல்ல. ஏனெனில், அவர் வகித்த மந்திரிப் பதவிகளின் போது தமிழ் மக்களுக்கு என தனியாக எதையும் அவர் செய்யவில்லை.

“ நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடி புல்லுக்கும் அங்கே பொசியுமாம ” என்பது போல் சிங்களவர்களுக்கு எனச் செய்தவை சிலவேளை தமிழ் மக்கள் சிலருக்கும் உதவியிருக்கலாம். இதனைத்தவிர தமிழ் மக்கள் அவரால் நன்மை எதுவும் அடைந்ததில்லை. ஆகையினால், தமிழ் மக்களுக்கென அதைச் செய்தேன், இதைச் செய்தேன் எனக் கூற மகிந்தராஜபக்ஷவிடம் எதுவுமே இல்லை.

ஆனால், பேச்சிற்குத்தானும் மகிந்தராஜபக்ஷ எதுவாகிலும் செய்துள்ளதாக வைத்துக்கொண்டாலும், தற்போதைய சூழ்நிலையில் அதைச் செய்தேன், இதைச் செய்தேன், என்பவை எல்லாம் தமிழ் மக்கள் மத்தியில் எடுபடப்போகும் விடயங்களல்ல. இவை சிலவேளைகளில் சிங்கள மக்களிடம் எடுபடலாம்.

தமிழ் மக்களைப் பொறுத்து இன்று அவர்கள் கோருவது சலுகைகளையோ பதவிகளையோ அல்ல. அவர்கள் கோருவது தமது அடிப்படை உரிமைகளையே. அதாவது தமது பாதுகாப்பானதும், சுதந்திரமானதுமான வாழ்வையே. அவற்றிற்குச் சிறிலங்கா ஆட்சியாளர்கள் கூறப்போவது என்ன? முன்வைக்கப் போவது என்ன? என்பவையே இன்று தமிழ்மக்களைப் பொறுத்து முக்கியமானவையாகும்.

கடந்தகால சிங்கள ஆட்சியாளர்கள் – அரசியல்வாதிகள் எவருமே தமிழ்மக்கள் தம்மீது நம்பிக்கை வைக்கத்தக்கதான வகையிலான செயற்பாட்டைக் கொண்டவர்களாக இருந்ததில்லை. அவர்களின் கடந்தகால நடவடிக்கைகள் யாவும் தமிழ்மக்களின் கோரிக்கைகளைப் புறக்கணிப்பவையாகவும், அவர்களின் உரிமைகளை மறுப்பவையாகவுமே இருந்துள்ளன.

இந்த வகையிலேயே பிரதமர் மகிந்தராஜபக்ஷவின் அறிமுகமும் உள்ளது. இவர் பிரதமராகத் ‘ தேசிய அரசியலில ’ அறிமுகமான பின்னர் கூட மேற்கொண்ட நடவடிக்கைகள் தமிழ்மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக இருந்ததில்லை. சுனாமிப் பேரலையின் பின்னான புனர்வாழ்வுப்பணிக்கான பொதுக்கட்டமைப்பைக் கூட அவர் ஆதரிக்கத் தயாராக இருந்ததில்லை.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரம் உச்சமாக நடந்தவேளையில், அப்போதைய சனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கூறினார் “நான் சிங்கள மக்களின் தலைவனாகவே இருக்க விரும்புகிறேன” என்று. மகிந்த ராஜபக்ஷவின் நடவடிக்கைகளும் இதனையே வெளிப்படுத்துவதாகவே இருக்கின்றது. இவர் “சிங்கள மக்களின் கருத்திற்கே நான் முதன்மை அளிக்கின்றேன்” என்கின்றார்.

அவ்வாறு இல்லாது விடில், மகிந்தராஜபக்ஷ இன்று இனவாதத்தையே தனது அடிப்படை அரசியல் தத்துவமாக்கிவிட்ட ஜே.வி.பி. யுடனும், ஜாதிக ஹெல உறுமயவுடனும் கூட்டுச்சேர்ந்திருக்க மாட்டார். தமிழ் மக்களின் உரிமைக்கான கோரிக்கைகளை முற்றாகவே நிராகரிக்கும் கட்சிகளுடன் நின்றுகொண்டு தமிழ் அரச ஊழியர்களுக்கு சலுகை வழங்குவேன் எனக் கடிதம் எழுதியிருக்கமாட்டார்.

மகிந்த ராஜபக்ஷவும் சரி, வேறு சிங்கள அரசியல்வாதிகளும்சரி யாராக இருப்பினும் இன்றைய அரசியல் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். தமிழ் மக்களின் சலுகைகளும், உரிமைகளும் கேட்ட காலமெல்லாம் எப்போதோ கடந்துபோய்விட்டது. தமிழ் மக்கள் தற்பொழுது கேட்பது தமது உரிமைகளையும், அதிகாரங்களையுமே. அதற்காகவே அவர்கள் இன்று பெரும் எழுச்சிப் போராட்டங்களையும் நடாத்திக்கொண்டிருக்கின்றனர். இவற்றுக்கு சிங்கள ஆட்சியாளர்கள் எவராவது செவிசாய்க்கத் தயாராக இருந்தால் அவர்களைப் பற்றி மட்டுமே தமிழ் மக்களால் சிந்திக்க முடியும்.

அவற்றை விடுத்து, பௌத்த – சிங்கள பேரினவாதத்தின் அடையாளமாக நெற்றியில் தம்மை வெளிப்படுத்திக்கொண்டு தமிழ் மக்களின் வாக்குகளுக்காகக் கடிதம் எழுதுவது சின்னத்தனமானதும், சிறுபிள்ளைத்தனமானதும் கூட. ஆனந்தசங்கரி போன்றோர் இத்தகைய ஆலோசனையைச் சிலவேளை மகிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கியிருக்கக்கூடும். ஏனெனில் கடந்த பொதுத்தேர்தலில் அவர்கள் இதனையே செய்தனர். ஆனந்தசங்கரி போன்றோரின் ஆலோசனைபெறப்படாது இருப்பினும்கூட, கடந்த பொதுத்தேர்தலில் அவர்களுக்குத் தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பைத் தெரிந்தபின்னரும் அவ்வழியைப் பின்பற்றுவது அறிவுடமையானதாகாது.

# திலீபன் ஒரு புரட்சித் தீ



தியாகி திலீபனே!
நீ புரட்சிக்கு வித்திட்ட எரிமலை
சுதந்திர தாகத்தால் தன்னலமறுத்துத்
தியாகத் தீயில் உன்னையே உருக்கிய
புடமிட்ட தங்கம்
வளமான வசதியான நல்வாழ்வைப் புறந்தள்ளி
தன்னல மறுத்த தியாக வேங்கை
சிங்கள அரசின் செருக்கடக்க
முனைந்து நின்ற தலைவனுக்கு
அரணாக அமைச்சனாகவிருந்து
தன்மானம் காத்த அருட்சோதி
மக்களின் அரசியல் அறியாமையை அகற்றி
அறிவொளி ஏற்றிய விடிவெள்ளி
அடிமை விலங்கைத் தகர்த்தெறிய
அதிகாலையில் கூவிய சேவல்
துன்புறும் மக்களின் துயர்களைந்த
நடமாடும் மருத்துவபீடம்
கயமையுடன் கால்பதித்த இந்திய அமைதிப்படையை
நச்சுநாகமென உலகறியப்படமெடுத்தாட வைத்த பாம்பாட்டி
ஆக்கிரமிப்பாளர்களின் அட்டூழியங்களைத் தடுக்க
அறப்போரில் குதித்த ஆத்மஞானி
அழிகின்ற உயிர்களை அழிக்கவந்த
இந்திய வல்லாதிக்கத்தின் மடைமையை
உலகறியப் பறைசாற்றிய தத்துவஞானி
புரட்சிக் கருத்துக்களை அள்ளி விதைத்து
இளம் உள்ளங்களின் உணர்வுகளை முறுக்கேற்றிய சிந்தனைச் சிற்பி
மாவீரனே திலீபா! நீ மூட்டிய புரட்சித் தீ எதிரியைப்
பொசுக்கிவிட்டதே எங்கும் தேசியக் கொடிகள்
காற்றில் அசைந்தாடுகின்றன.

மாரீசன்

# தமிழர்களைப் புறந்தள்ளி எதையுமே இந்நாட்டில் செய்துவிட முடியாது!

## – ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது

(கொழும்பு)

தமிழர்களை இணைக்காது இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவோ பொருளாதாரத்தை கட்டியெழுப்பவோ முடியாது. அவர்களை புறந்தள்ளி இந்த நாட்டில் எதனையும் செய்ய முடியாது. இதுவே இந்த நாடு கண்ட அனுபவ உண்மையென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எமது நாட்டில் விவசாயத்தை கட்டியெழுப்ப உறுதுணையாக நின்றவர்களும் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து நாட்டை பாதுகாக்க துணை வந்தவர்களும் தமிழர்களே. இதுவே உண்மையான வரலாறு என்றும் ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

அனைத்து சமூகங்களும் சங்கிலித்தொடர்போல ஒன்றுபட்டு வாழும் சூழ்நிலையை உருவாக்கும் ஒரு நல்லாட்சியை ஏற்படுத்துவதே எமது நோக்கம். நாம் ஆட்சிப்பீடம் ஏறி ஐந்து ஆண்டுகளிற்குள் மக்களுக்கு தேவையான சிறந்த அடிப்படை வசதிகளுடன் கூடிய நாட்டைக் கட்டியெழுப்புவோம் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

கொழும்பு-07 இல் உள்ள எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட களுத்துறை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்திருந்தார்.

# 41,000 தொழில்துறை பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்குக

## – பட்டதாரிகளின் ஒருங்கிணைக்கப்பட்ட சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

தொழில்துறையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள 41,000 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும் என்று 2004 ஆம் ஆண்டு தொழில்சார் பட்டதாரிகளின் ஒருங்கிணைக்கப்பட்ட சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பட்டதாரிகள் அனைவருக்கும் நியமனம் வழங்காமல் பொறுப்பற்ற முறையில் செயற்படுவதற்கு முன்னர் பயிற்சி பெற்றவர்களுக்கு பயிற்சியுடனான சேவையிலுள்ள பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்பதே தொழில்சார் பட்டதாரிகளின் ஒருங்கிணைந்த சங்கத்தினரின் கோரிக்கையாகும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாகக் கடந்த ஐந்தாம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானம் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் செயற்படுத்தப்படவில்லையென்று இச்சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதிலுள்ள குறைபாடுகளை இனம் கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்த அழைப்பு விடுக்கப்பட வேண்டும் என்றும் இம்மாதம் முப்பதாம் திகதிக்கு முன்னர் பயிலுநர் பட்டதாரிகளின் சேவையை நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் சங்கம் கோரியுள்ளது. அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் கடும் நடவடிக்கைகளில் தமது சங்கம் ஈடுபடுமென்றும் தொழில்சார் பட்டதாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுனாமியால் பாதிப்புற்றோருக்கு உதவ பாராளுமன்றில் குறைநிரப்பு பிரேரணை!

(கொழும்பு)

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவென பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் குறைநிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சின் சார்பில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதனைச் சமர்ப்பித்தார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக வரவு - செலவுத்திட்டத்தின் ஒதுக்கீடுகள் போதாமை காரணமாக இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில் 58 ஆயிரத்து 621 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகத் தெரிவித்த அவர், அதில் 25 ஆயிரத்து 513 மில்லியன் ரூபா வெளிநாட்டு நிதிகள் மற்றும் உதவிகள் மூலம் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன வரவு- செலவுத்திட்டத்தின் நிதிகள் உரியவகையில் பயன்படுத்தப்படாமையே இதற்கான காரணமென குறிப்பிட்டார்.

கடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் ஒரு முறை மாத்திரமே குறைநிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (32)

# குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ்களில் பெற்றோரின் அடையாள அட்டை இலக்கம்

குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழ்கள் வழங்குகின்ற போது அவற்றில் பெற்றோரின் தேசிய அடையாள அட்டை இலக்கங்களைக் குறிப்பிடும் திட்டம் ஒன்றைச் செயற்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாகப் பிறப்புச் சான்றிதழ் தொடர்பாக ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காணலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.


இத்திட்டத்தின்கீழ் இலங்கையர்கள் தொடர்பான விபரங்களைக் கணினிமயப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ளதாகச் சிறிலங்கா அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், சிறிலங்கா நிர்வாக அமைச்சு உட்பட பல நிறுவனங்கள் ஒருங்கிணைந்து இத்திட்டத்தைச் செயற்படுத்தவுள்ளன.

# தமிழீழ கடற்படையின் துணைப்படை

## நான்காவது அணி பயிற்சி நிறைவு





வடமராட்சி கிழக்கிலுள்ள லெப்டினன்ட் கேணல் மறவன் பயிற்சிப் பாசறையில் தமிழீழ கடற்படை துணைப் படையின் நான்காவது அணியினர் பயிற்சியினை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர்.

நேற்று மாலை 5.00 மணியளவில் உடுத்துறை மைதானத்தில் மேற்படி நிகழ்வுகள் ஆரம்பமானது. இந் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, துணைப்படை வீரர்கள், போராளிகள் முன்னிலையில் ஏற்றி வைத்தார். லெப்டினன்ட் கேணல் மறவனின் திருவுருவப் படத்திற்கு அவரது புதல்வன் ஈகச்சுடரினை ஏற்றி மலர் மாலையினை அணி வித்தார். திலீபனின் திரு வுருவப்படத்திற்கு லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரிவுப் பொறுப்பாளர் கீதன் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலையினை அணிவித்தார். ஆரம்ப நிகழ்வுகளைத தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமானது. அரங்கத்தில் துணைப் படை வீரர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன தொடர்ந்து முதன்மை உரை, சிறப்புரை என்பன இடம் பெற்றன. முதன்மை உரையினை கீதன் நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்புரையினை

சிறப்புத் தளபதி கேணல் சூசை நிகழ்த்தினார். உரைகளைத் தொடர்ந்து பயிற்சியின் போது கூடிய புள்ளிகளைப் பெற்ற வீரர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது. (தீ)

### கைக்குண்டு...

யளவில் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் காயமடைந்த பொலிசார் இராமநாயக்க முதியான் சலாகே சோமசிறி (22) என தெரிய வந்துள்ளது. படையினரின் பெயர் விபரம் அறியப்படவில்லை. காயமடைந்த நால்வரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### அனைத்துலக...

வேறல்ல. இரண்டையும் எவராலும் பிரிக்க முடியாது. விடுதலைப் புலிகளைத் தமது ஏக பிரதிநிதிகளாக மக்கள் என்றோ அங்கீகரித்து விட்டார்கள். விடுதலைப் புலிகளே தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகள்.

"தமிழ் மக்களின் இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் சிங்கள தேசமும் அனைத்துலகமும் ஏற்றுக் கொள்ள வேண்டும், வடக்கு-கிழக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபை அமைக்கப்பட வேண்டும் ஆகிய கொள்கையுடன் கடந்த தேர்தலில் போட்டியிட்ட தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு 96 வீதமான தமிழ் மக்கள் ஆதரவளித்திருக்கின்றனர். இதனை விடவேறு என்ன அங்கீகாரம் வேண்டும்?

சிங்கள அரசுகளுக்கு இன நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு விருப்பமில்லை. இதனை அவர்கள் பல தடவை மிகவும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர். தமிழ் மக்களைப் பொறுத்தவரை சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் எதுவித வித்தியாசமும் கிடையாது. போரா? சமாதானமா? என்பதை தேர்தலில் சிங்கள மக்களே முடிவு செய்ய வேண்டும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயக மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான பொதுக்கட்டமைப்புக்குக் கூட சிறிலங்காவின் உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ள நிலையில், அனைத்துலக நாடுகளே பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவ வேண்டும்.

தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் மீது புலம் பெயர்ந்த மக்கள் அதி உயர் மதிப்பும் அன்பும் வைத்திருக்கிறார்கள்.தொடர்ந்தும் இதே கௌரவத்துடன் புலம் பெயர்ந்த மக்கள் அவரது கரங்களைப் பலப்படுத்த வேண்டும்.

இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பநதம் ஒன்றைச் செய்து கொள்ளத் திட்டமிட்ட இந்தியா, தற்போது வைகோ போன்ற தமிழகத் தலைவர்களின் தலையீட்டால் அந்த ஒப்பந்தத்தைச் செய்வதில்லை என்று முடிவு செய்துள்ளது.வைகோவிடம் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இது தொடர்பாக உறுதிமொழியும் வழங்கியிருக்கிறார்.

இந்த நிலையில் ஈழத்தமிழ் மக்களின் நெருக்கடிக்கு இந்தியாவுடன் இணைந்தே தீர்வு காணப்பட வேண்டும். இதுவே தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு எனக் குறிப்பிட்ட அவர் சிங்கள அரசுகளுக்கு இனநெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கு விருப்பமில்லை. இதனை அரசுகள் பல தடவை மிகவும் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார். (32)

### பாராளுமன்றில்...

கொள்ளப்பட்ட அவசரகாலச் சட்டமூலம், கொழும்பில் தமிழ்மக்களைப் பதிவு செய்வதற்காக பொலிசாரால் வழங்கப்பட்ட 300க்கு மேற்பட்ட படிவங்கள் என்பவற்றைக் கிழித்து பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறிவிக்கிரம நாயக்கவை நோக்கி வீசினார்.

பாராளுமன்றத்தில் பேசிய ஐக்கிய தேசியக்கட்சியின் தமிழ் உறுப்பினரான தி.மகேஸ்வரன், தனக்கு இந்த விவாதத்தின்போது பேச வாய்ப்பளிக்காததைக் கண்டித்தார்.

கொழும்பிலும் இதர பகுதிகளிலும் அவசரகால சட்டத்தின் பெயரால சிறிலங்கா இராணுவத்தால் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படும் நிலையிலும் தமது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையும் அவசர காலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவளிப்பதை தி.மகேஸ்வரன் வன்மையாக கண்டித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற பிரதம கொறடா மகிந்த சமரசிங்க, இந்த சட்ட நீடிப்பு மசோதா மீது பேச மகேஸ்வரனுக்கு சபாநாயகர் லொக்கு பண்டார நேரம் ஒதுக்க வில்லை என்று கூறினார்.

இதனிடையே ஜே.வி.பி.க்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் ஐந்து நிமிட நேரத்தை மகேஸ்வரனுக்கு ஒதுக்குவதாக அதன் பாராளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ச கூறியதற்கு மகிந்த சமரசிங்க ஆட்சேபம் தெரிவித்தார்.

இந்நிலையில் தான் கைவசம் வைத்திருந்த மேற்படி ஆவணங்களை அவர் கிழித்தெறிந்து விட்டு வெளியேறினார்.

மகேஸ்வரனின் இந்தச் செயலுக்கு ஆளும் கட்சி உறுப்பினர் ரோகித அபேகுணவர்த்தன கண்டனம் தெரிவித்தார். இதனால் அவையில் சலசலப்பு ஏற்பட்டது சிறிதுநேரம் கழித்து மகேஸ்வரன் மீண்டும் தனது ஆசனத்தில் அமர்ந்தார். விவாதம் தொடர்ந்து நடைபெற்றது.

### படையினர்..

இச்சோதனை நடவடிக்கையினால் பாடசாலை மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள், பெரும் சிரமத்தினை எதிர்நோக்கினர். வீடு வீடாக இராணுவம், பொலிசார் சென்றமையால் வீட்டிலுள்ள பெண்கள் பெரும் அசௌகரியம் அடைந்துள்ளார்கள். அத்துடன் வீதியால் சென்றவர்களும் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

### இராணுவ...

மூடப்பட்டிருந்தன. மாணவர்களும் பாடசாலைகளுக்குச் செல்லவில்லை. சிங்களவரின் சில வர்த்தக நிலையங்கள் மட்டுமே திறக்கப்பட்டிருந்தன.

அரச பேருந்து சேவை முற்றாக நிறுத்தப்பட்ட நிலையில் சிங்களவர் நடத்தும் சில. தனியார் பேருந்துகள் மட்டும் பேருந்து நிலையத்தில் நின்றிருந்தன.

இந்தக் கதவடைப்புப் போராட்டத்தையடுத்து நடுவீதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டு இருந்தனர். (25)

### இலங்கையிலேயே..

இந்த வங்கி 1994 ஆம் ஆண்டு மே மாதம் அமைக்கப்பட்டது. தமிழீழ காவல்துறை உருவாக்கப்பட்டு மூன்று ஆண்டுகாலத்துக்குப் பின்னர் இந்த வங்கி ஏற்படுத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் வங்கியில் சிறிலங்கா ரூபாய் பயன்படுத்தப்படுகிறது. வர்த்தக ரீதியான சிறிலங்காவின் வங்கிகளை விட இந்த வங்கியில் வைப்புத் தொகைக்கான வட்டி வீதம் 8.5 வீதம் அளவிற்கு வழங்கப்படுகிறது. சிறிலங்காவில்வைப்புத் தொகைக்கான சராசரி வட்டி 5.7 வீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோல் கடன்களுக்கான வட்டி வீதமும் சிறிலங்காவின் வர்த்த ரீதியான வங்கிகளின் விகிதமான 11.42முதல் 33.6சதவீத அளவை விட குறைவாக ஒன்பது சதவீதம் முதல் 18 சதவீதம் வரையே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழீழ வங்கி இலாப நட்டக்கணக்குகளை வெளிடுவதில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளைபிரபாகரனால் நேரடியாக நியமிக்கப்பட்டுள்ள ஏழு பேர் கொண்ட நிர்வாக சபையிடம் மட்டுமே இந்த விபரங்கள் கையளிக்கப்படும்.

இந்த ஏழு பேர் கொண்ட நிர்வாக சபையே வங்கி தொடர்பான நிதிக்கொள்கைகளையும் வட்டி விகிதங்களையும் முடிவு செய்து அறிவிக்கிறது.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையடுத்து கடன் தொகையை மக்கள் பெருமளவில் பெற்றனர். வீடுகளைத் திருத்தவும், வர்த்தகங்களை தொடங்கவும், பொருட்களை வாங்கவும், சூரிய ஒளி மூலமான மின்சார உற்பத்தி சாதனங்களை அமைக்கவும் இந்தத் தொகையை தமிழீழ வங்கியிடமிருந்து பெற்றுச் சென்றனர்.

தமிழீழ வங்கியின் 12 கிளைகளில் நான்கு கிளைகள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

தலைமையகமான கிளிநொச்சியில் பிளாஸ்மா ஸ்கிறீன் வசதி அமைக்கப்பட்டுள்ளது. இந்த வங்கியில் 10 ஆயிரம் வைப்புத் தொகைதாரர்களும் 300 நடப்பு வங்கிக்கணக்கு வைத்துள்ளோரும் உள்ளனர்.




## சட்டவிரோதமாக மணலேற்றிய இரு உழவு இயந்திரங்கள் தீக்கிரை!

(நாவற்குழி)

திருட்டுத்தனமாக மணல் ஏற்றிவந்த இரண்டு இருசில்லு உழவு இயந்திரங்கள் நாவற்குழி அன்றூர்ஸ் இறால் பதனிடும் நிலையம் முன்பாக தீயிட்டு கொழுத்தப்பட்டுள்ளன.

நேற்று நள்ளிரவு 11.15 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தின் போது கொழுத்தப்பட்ட இரண்டு இரு சில்லு உழவு இயந்திரங்களும் கள்ளத்தனமாக மணல் ஏற்றி வந்தசமயம் அதனை வழிமறித்த இனந்தெரியாதோர் அவையிரண்டையும் தீமூட்டி எரித்ததாகவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை சிலதினங்களுக்கு முன்னர் ஒரு கண்டர் வாகனமும் இவ்வாறு திருட்டுத்தனமாக மணல் ஏற்றி வந்தபோது தீக்கிரையாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (27)

## அனுமதி பெறாது கட்டடங்கள் அமைத்தல் சட்டநடவடிக்கைக்குட்படுத்தப்படும்

### க. பி. சபை விசேட ஆணையாளர் அறிவுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப்பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் பல கட்டடங்களுக்கான அனுமதி கரைச்சிப்பிரதேச சபையில் பெறப்படவில்லையெனத்தெரிய வந்துள்ளது.

இது விடயம் தொடர்பாக கரைச்சி பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தனுடன் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில:

கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுவதற்கு முன்பதாக கரைச்சிப் பிரதேச சபையின் அனுமதி பெறப்பட்டதன் பின்பாகவே கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் எனப்பல முறை பத்திரிகை வாயிலாக தெரிவிக்கப்பட்டிருந்த பொழுதிலும் பலரால் அனுமதி பெறப்படாது கட்டட அமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத்தெரிய வந்துள்ளது.

அனுமதி பெறப்படாது கட்டட அமைப்புப் பணிகளை மேற்கொள்பவர்கள் உடன் கரைச்சிப் பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு அதற்கானஅனுமதியினை பெற்றுக் கொள்ளும் வண்ணம் வேண்டியுள்ளதுடன் அனுமதி பெறப்படாவிடின் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் அனுமதியற்ற கட்டடமாக கருதப்பட்டு எவ்வித செயற்பாடும் செய்ய முடியாத வகையில் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுமென கரைச்சிப்பிரதேச விசேட ஆணையாளர் தெரிவித்துள்ளார்.(சோ)

### விவசாயக்குழுக்கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட விவசாயக் குழுக கூட்டம் வழமைபோல் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும். எனவே சம்பந் தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

### நாகர் கோவில் படுகொலை நினைவு நிகழ்வு

நாகர்கோவில் படுகொலையின் பத்தாவது ஆண்டு நினைவுகூரல் நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.. சிறிலங்கா விமானப் படையினரின் புக்காரா விமானக் குண்டு வீச்சு விமானங்கள் நிகழ்த்திய மிக மோசமான குண்டுத் தாக்குதலால் நாகர் கோவில் மகாவித்தியாலய மாணவர்கள் இருபது பேர் படுகொலை செய்யப்பட்டமை தெரிந்ததே. இவ்வாறு விமானக் குண்டு வீச்சு தாக்குதலில் பலியான மாணவர்களின் பத்தாம் ஆண்டு நினைவு நிகழ்வு பருத்தித்துறை கிராமக் கோட்டில் அமைந்துள்ள நாகர்கோவில் ம.வி தற்காலிக பாடசாலை யில் பாடசாலை அதிபர் சி.மகேந்திரம தலைமையில் காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.(கா)

### இனந்தெரியாதோர்..

இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, நேற்றிரவு 7.00 மணியளவில் வாழைச்சேனை பேய்த்தாழையில் குப்பை எரிக்கும் போது குண்டொன்று வெடித்ததில் விக்கினேஸ்வரன் விநோத் (10) என்ற சிறுவன் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### அவசர...

...ணியின் தலைவர் மனோ கணேசன் மற்றும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி. சந்திரசேகரன் மற்றும் பி. ராதாகிருஸ்ணன் ஆகியோரும் தமிழ்தேசிய கூட்டமைப்பினரும் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.இதன்படி பிரேரணைக்கு ஆதரவாக 118 வாக்குகளும் எதிராக 24 வாக்குகளும் கிடைத்தன.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.